कामः	சம்போகத்தில் (ராவ ணனுடைய) அசை	दूरं	முற்றிலும்
		न पीडयेत् अपि	கெடுத்துவிடாமல்
तां	அந்த		இருக்கணமே.

एवमादि नरश्रेष्ठो विललाप नृपात्मजः । विहङ्ग इव सारङ्गः सलिलं त्रिदशेश्वरात् ॥ १३ ॥

नृपात्मजः	சக்கிரவர்த்தி மகனும்	त्रिदशेश्वरात्	தேவேந்திரனிடத்தி
नरश्रेष्ठः	புருஷோத்தமரு மாகிய அவர்	सलिलं	மழைக்காக [னின்று
एवमादि	இப்படியெல்லாம்	सारङ्गः विहङ्गः	சாதகப்பறவை
		इव	போல
		विललाप	கதறினர்.

ततः सञ्चर्य रम्येषु फलार्थी गिरिसानुषु । ददर्श पर्युपावृत्तो लक्ष्मणो लक्ष्मणाग्रजम् ॥

रम्येषु	அழகான	पर्युपावृत्तः	திரும்பிவந்துசேர்ந்த
गिरिसानुषु	மலைத்தாழ்வரைகளில்	लक्ष्मणः	லக்ஷ்மணர்
फलार्थी	பழங்களை வேண்டி	लक्ष्मणाग्रजं	லக்ஷ்மணரின் தமைய னரை (ஸ்ரீராமரை)
सञ्चर्य	திரிந்து,	ददर्श	கண்டு காத்துநின்ற னர்.
ततः	அப்பொழுது		

तं चिन्तया दुःसहया परीतं विसंज्ञमेकं विजने मनस्वी ।
भ्रातुर्विषादात्परितापदीनः समीक्ष्य सौमित्रिरुवाच रामम् ॥ १५ ॥

मनस्वी	மகாப் பிராக்ஞராகிய	तं	அந்த
सौमित्रिः	லக்ஷ்மணர்	रामं	ஸ்ரீராமரை
दुस्सहया	பொறுத்தற்கரிய	समीक्ष्य	பார்த்து,
चिन्तया	மனக்கவலையால்	भ्रातुः	தமையனது
परितं	நொந்து	विषादात्	துயரத்தினால்
विसंज्ञं	களைமாறி	परितापदीनः	பரிதபித்து துயரப் படுகின்றவராகி
विजने	ஒருவருமில்லாத இடத்தில்	उवाच	பின்வருமாறு மொழிந்தார்.
एकं	தனியாயிருந்த		

किमार्य कामस्य वशं गतेन किमात्मपौरुष्यपराभवेन ।
अयं सदा संहियते समाधिः किमत्र योगेन निवर्तितेन ॥ १६ ॥

आर्य	"அண்ணா!	समाधिः	நிம்மதியானது
कामस्य	மன்னாதத்திற்கு	सदा	அடிக்கடி
वशं गतेन	ஈடுபட்டுக்கிடப்பதால்	संहियते	உம்மால் குலைக்கப்படு கிறதே?
किं	ஆவதென்ன?		
आत्मपौरुष्य-पराभवेन	உமது ஆண்மையை ஒழித்துவிடுவதால்	अत्र	இப்பொழுது
		निवर्तितेन	தாறுமாறாய்த
किं	ஆவதென்ன?	योगेन	நினைவால் [திரும்பிய
अयं	இந்த	किम्	ஆவதென்ன?

क्रियाभियोगं मनसः प्रसादं समाधियोगानुगतं च कालम् ।
सहायसामर्थ्यमदीनसत्त्व स्वकर्महेतुं च कुरुष्व हेतुम् ॥ १७ ॥

अदीनसत्त्व	எதற்கும் சலியா ஆண்மையுடையவரே!
क्रियाभियोगं	மேற்கொண்ட காரியத்தில் விடாமுயற்சியையும்
मनसः प्रसादं	மனதைச் சிதறவிடாதிருக்குதலையும்
समाधि-योगानुगतं	பூர்வசங்கேதத்தின் பயனுப் நிஷ்கர்ஷிக்கப்பட்ட
कालं च	காலத்தையும்
सहायसामर्थ्यं	அன்பர்களின் சாமர்த்தியத்தையும்
स्वकर्महेतुं	உமது காரியத்தின் பிரயோஜனத்தையும்
हेतुं च	அதற்கேற்ற வழியையும்
कुरुष्व	மனதில் கொள்ளும்.

न जानकी मानववंशनाथ त्वया सनाथा सुलभा परेण ।
न चाग्निचूडां ज्वलितामुपेत्य न दह्यते वीरवराह कश्चित् ॥ १८ ॥

मानववंशनाथ	"மனுகுலத்தலைவ!
वीरवराह	உத்தமவீரர்களால் கொண்டாடப்படுபவரே!
त्वया	உம்மை
सनाथा	நாயகராக உடைய
जानकी	ஜானகிதேவியார்
परेण	வேறொருவனுல்
सुलभा न	அணுகமுடியாதவள்.
कश्चित्	ஒருவன்
ज्वलितां	கொழுந்துவிட்டெரியும்
अग्निचूडां च	அக்னிஜ்வாலையையும்
उपेत्य	கிட்டி,
न दह्यते न	பொசுக்கப்படாமலிரான்.

स लक्ष्मिवांल्लक्ष्मणमप्रधृष्यं स्वभावजं वाक्यमुवाच रामः ।
हितं च पथ्यं च नयप्रसक्तं ससाम धर्मार्थसमाहितं च ॥ १९ ॥

लक्ष्मिवान्	பாக்யசாலியாகிய
सः	அந்த
रामः	ஸ்ரீராமர்
लक्ष्मणं	லக்ஷ்மணனைப் பார்த்து
अप्रधृष्यं	மறுபதிலுக்கிடம் கொடாததும்
स्वभावजं	பிறவிகுணத்தால் விளைந்ததும்
हितं च	சமயத்திற்கேற்றதும்
पथ्यं च	நன்மை பயக்கத்தக்கதும்
नयप्रसक्तं	சல்யாணகுணங்களுக்கேற்றதாயிருக்கிறதும்
ससाम	நல்லனியை விளங்கக்காட்டுகிறதும்
धर्मार्थ-समाहितं च	தர்மத்திலும் விளையும் பயனை நன்கு விளங்கக்காட்டுகிறதுமான
वाक्यं	பின்வரும் மொழியை
उवाच	மொழிந்தார்.

निःसंशयं कार्यमवेक्षितव्यं क्रियाविशेषो ह्यनुवर्तितव्यः ।
न तु प्रवृत्तस्य दुरासदस्य कुमार कार्यस्य फलं न चिन्त्यम् ॥ २० ॥

कुमार	"குழந்தாய்!
कार्यं	ஒரு காரியமானது
निःसंशयं	கலவரமின்றி
अवेक्षितव्यं	கவனிக்கத்தக்கது.
क्रियाविशेषः	அக்கக் காரியத்தின் தொடர்ப்பானது
अनुवर्तितव्यः हि	விடாது முயற்சிக்கப் படவேண்டியதே.
प्रवृत्तस्य	மேற்கொண்ட
दुरासदस्य	கஷ்டமான
कार्यस्य	காரியத்தினது
फलं	பயன்
न तु	ஒருபொழுதும்
चिन्त्यं न	நினைக்கத்தக்கதன்று".

अथ पद्मपलाशाक्षीं मैथिलीमनुचिन्तयन् । उवाच लक्ष्मणं रामो मुखेन परिशुष्यता ॥

रामः	ஸ்ரீராமர்
पद्मपलाशाक्षीं	தாமரையிதழ்போன்ற கண்களையுடைய
मैथिलीं	ஜானகிதேவியாரைப் பற்றி
अनुचिन्तयन्	கவலைப்படுகின்றவராய்
परिशुष्यता	வாடிய
मुखेन	முகத்தோடு
लक्ष्मणं	லக்ஷ்மணரைப் பார்த்து
अथ	பின்வருமாறு
उवाच	மொழிந்தார்.

तर्पयित्वा सहस्राक्षः सलिलेन वसुन्धराम् । निर्वर्तयित्वा सस्यानि कृतकर्मा व्यवस्थितः ॥

सहस्राक्षः	"ஆயிரங்கண்ணன்
वसुन्धरां	பூமியை
सलिलेन	மழையினால்
तर्पयित्वा	குளிரச்செய்து,
सस्यानि	பயிர்களை
निर्वर्तयित्वा	வளரச்செய்து,
कृतकर्मा	தனது தொழிலை செய்துமுடித்தவனாய்
व्यवस्थितः	ஆயினன்.

स्निग्धगम्भीरनिर्घोषाः शैलद्रुमपुरोगमाः । विसृज्य सलिलं मेघाः परिश्रान्ता नृपात्मज ॥

नृपात्मज	"ராஜகுமார!
मेघाः	மேகங்கள்
स्निग्धगंभीर-निर्घोषाः	ஒலிகொண்டு கம்பீரமாய் ஒலிக்கின்றனவாய்
शैलद्रुम-पुरोगमाः	மலைகளின்மீதும் விருக்ஷங்களின்மீதும் உயர சஞ்சரிக்கின்ற
सलिलं	நீரை [வைகளாய்
विसृज्य	பொழித்துவிட்டு,
परिश्रान्ताः	இளைப்பாறுகின்றன.

नीलोत्पलदलश्यामाः श्यामीकृत्वा दिशो दश । विमदा इव मातङ्गाः शान्तवेगाः पयोधराः ॥

पयोधराः	"மேகங்கள்
नीलोत्पलदल-श्यामाः	கருநெய்தல் இதழ்கள் போல் கறுத்தவைகளாய்
दश	பத்து [ளாய்
दिशः	திக்குகளையும்
श्यामीकृत्वा	கறுக்கச்செய்து,
विमदाः	மதமொழிந்த
मातङ्गाः इव	யானைகள்போலவே
शान्तवेगाः	ஆற்றலடங்கிக் கிடக்கின்றன

जलगर्भा महावेगाः कुटजार्जुनगन्धिनः । चरित्वा विरताः सौम्य वृष्टिवाताः समुद्यताः ॥

सौम्य — "அப்பா!
समुद्यताः — முன்கிளம்பிய
वृष्टिवाताः — மழைக்காற்றுகள்
जलगर्भाः — நீர்த்துளிகளை சுமந்த வைகளாய்
महावेगाः — மகாவேகத்தையுடை யவைகளாய்
कुटजार्जुन-गन्धिनः — மலைமல்லிகை, மருது இவைகளின் வாச னைகளையுடையவை களாய்
चरित्वा — வீசிவிட்டு,
विरताः — ஓய்ந்தன.

घनानां वारणानां च मयूराणां च लक्ष्मण । नादः प्रस्रवणानां च प्रशान्तः सहसाऽनघ ॥

अनघ — "தோஷமற்றவளே!
लक्ष्मण — லக்ஷ்மணனே!
घनानां — மேகங்களுடையவும்,
वारणानां च — யானைகளுடையவும்,
मयूराणां च — மயில்களுடையவும்,
प्रस्रवणानां च — மலையருவிகளுடைய வும்
नादः — ஒலியானது
सहसा — ஏககாலத்தில்
प्रशान्तः — ஓய்ந்தது.

अभिवृष्टा महामेघैर्निर्मलाश्चित्रसानवः । अनुलिप्ता इवाभान्ति गिरयश्चन्द्ररश्मिभिः ॥

चित्रसानवः — "அழகிய தாழ்வரை களையுடைய
गिरयः — பர்வதங்கள்
महामेघैः — பெரும் மேகங்களால்
अभिवृष्टाः — கழுவப்பட்டவைக ளாய்
निर्मलाः — அழுக்கொழிந்தவை களாய்
चन्द्ररश्मिभिः — சந்திரகிரணங்களால், (நிலாவினால்)
अनुलिप्ताः इव — பூசப்பட்டவை போன்றனவாய்
आभान्ति — விளங்குகின்றன.

दर्शयन्ति शरन्नद्यः पुलिनानि शनैः शनैः । नवसङ्गमसव्रीडा जघनानीव योषितः ॥

शरन्नद्यः — "சரத்காலத்து நதிகள்
नवसङ्गमसव्रीडाः — ஒருவனைக்கண்டு வெட்கமடைந்த
योषितः — சிறு பெண்குழந்தை
जघनानि — பின்தட்டுக்களை [கள்
इव — எப்படி காண்பித்துக் கொண்டு ஓடுமோ அப்படியே,
शनैः शनैः — இங்குமங்கும்
पुलिनानि — மணல்த்தட்டுகளை
दर्शयन्ति — காட்டுகின்றன.

शाखासु सप्तच्छदपादपानां प्रभासु तारार्कनिशाकराणाम् ।
लीलासु चैवोत्तमवारणानां श्रियं विभज्याद्य शरत्प्रवृत्ता ॥ २९ ॥

शरत् — "சரத்காலமானது
सप्तच्छद-पादपानां — ஏழிலைப் பாலைவிரு க்ஷங்களுடைய
शाखासु — கிளைகளிலும்
तारार्क-निशाकराणां — நக்ஷத்திரங்கள், சூரி யன், சந்திரன் இவை களுடைய
प्रभासु च — ஒளிகளிலும்
उत्तमवारणानां — சிறந்த யானைகளு டைய
लीलासु एव — லீலைகளிலும்
श्रियं — சிறுவை
अद्य — இப்பொழுது
विभज्य — பாற்றவித்துக் கொண்டு,
प्रवृत्ता — தொடங்கிவிட்டது.

संप्रत्यनेकाश्रयचित्रशोभा लक्ष्मीः शरत्कालगुणोपनीता ।
सूर्याग्रहस्तप्रतिबोधितेषु पद्माकरेष्वभ्यधिकं विभाति ॥ ३० ॥

शरत्काल-गुणोपनीता	"சரத்காலகுணங்களால் பெற்பட்ட
अनेकाश्रय-चित्रशोभा	அனேக இடங்களிலும் படைத்து பலவித எழிலுற்ற
लक्ष्मीः	திரு
सूर्याग्रहस्त-प्रतिबोधितेषु	சூர்யபகவானது முதற்கிரணங்களால் மலர்ந்த
पद्माकरेषु	தாமரை ஓடைகளில்
संप्रति	இப்பொழுது
अभ्यधिकं	மிகவும் அதிகமாய்
विभाति	பிரகாசிக்கிறது.

सप्तच्छदानां कुसुमोपगन्धी षट्पादबृन्दैरनुगीयमानः ।
मत्तद्विपानां पवनोऽनुसारी दर्पं वनेष्वत्यधिकं करोति ॥ ३१ ॥

सप्तच्छदानां	"ஏழிலைப்பாலை விருக்ஷங்களுடைய
कुसुमोपगन्धी	மலர்மணம் கமழ்கின்றதும்
षट्पादबृन्दैः	வண்டுகளின் கூட்டங்களால்
अनुगीयमानः	ஒத்துப்பாடப் பெற்றதும்
अनुसारी	மேல்மேல் வீசும்
पवनः	காற்றுனது
वनेषु	காடுகளில்
मत्तद्विपानां	மதயானைகளுடைய
दर्पं	கொழுப்பை
अत्यधिकं	அதிகமாக
करोति	செய்கிறது.

अभ्यागतैश्चारुविशालपक्षैः सरःप्रियैः पद्मरजोवकीर्णैः ।
महानदीनां पुलिनोपयातैः क्रीडन्ति हंसाः सह चक्रवाकैः ॥ ३२ ॥

हंसाः	"அறம்சங்கள் ளும்.
अभ्यागतैः	திரும்பி வந்தவைகளும்
चारुविशालपक्षैः	அழகிய விசாலமான சிறகுகளையுடையனவும்
सरःप्रियैः	நீரில் ஆசையுள்ளவைகளும்
पद्मरजोऽवकीर्णैः	தாமரை மலர் தாதுப் படியப்பெற்றனவும்
महानदीनां	பெரும்நதிகளுடைய
पुलिनोपयातैः	மணல்த்திட்டுகளுக்கு வந்துசேர்ந்தனவுமான
चक्रवाकैः सह	சக்கிரவாகப்பக்ஷிகளோடுகூட
क्रीडन्ति	விளையாடுகின்றன.

मदप्रगल्भेष्वपि वारणेषु गवां समूहेषु च दर्पितेषु ।
प्रसन्नतोयासु च निम्नगासु विभाति लक्ष्मीर्बहुधा विभक्ता ॥ ३३ ॥

लक्ष्मीः	"திரு
मदप्रगल्भेषु	மதத்தால்செருக்குற்ற
वारणेषु अपि	யானைகள் இடத்திலும்
दर्पितेषु	கொழுத்த
गवां समूहेषु च	எருதுமந்தைகள் இடத்திலும்
प्रसन्नतोयासु	தெளிந்த நீரையுடைய
निम्नगासु च	மலையருவிகளிலும்
बहुधा	பலவாறாய்
विभक्ता	தோற்றுவித்துக் கொண்டு
विभाति	விளங்குகிறது.

नभः समीक्ष्याम्बुधरैर्विमुक्तं विमुक्तबर्हाभरणा वनेषु ।
प्रियास्वसक्ता विनिवृत्तशोभा गतोत्सवा ध्यानपरा मयूराः ॥ ३४ ॥

वनेषु	"காடுகளில்
मयूराः	மயில்கள்
नभः	ஆகாசத்தை
अम्बुधरैः विमुक्तं	மேகங்களில்லாததாய்
समीक्ष्य	பார்த்து,
विमुक्त-बर्हाभरणाः	தோகைகளாகிய ஆபரணங்களை விரிக்காதவைகளாய்
प्रियासु	பேடுகளிடம்
असक्ताः	உத்ஸாஹமில்லாதவைகளாய்
विनिवृत्तशोभाः	அழகு குன்றியவைகளாய்
गतोत्सवाः	உத்ஸாஹம் ஒழிந்தவைகளாய்
ध्यानपराः	கவலைகொண்டிருக்கின்றன.

मनोज्ञगन्धैः प्रियकैरनल्पैः पुष्पातिभारावनताग्रशाखैः ।
सुवर्णगौरैर्नयनाभिरामैरुद्योतितानीव वनान्तराणि ॥ ३५ ॥

वनान्तराणि	"வனப்பிரதேசங்கள்
मनोज्ञगन्धैः	நறுமணம் வீசுகின்றவைகளும்,
पुष्पातिभारावनताग्रशाखैः	புஷ்ப பாரத்தால் வளைந்த நுனிக்கிளையுடையனவும்,
सुवर्णगौरैः	தங்கம்போல் மஞ்சள் நிறமுடையனவும்,
नयनाभिरामैः	கண்ணிற்கினியனவு
अनल्पैः	அனேக [மான
प्रियकैः	வேங்கை மரங்களால்
उद्योतितानि इव	ஒளியுற்றன போலும்.

प्रियान्वितानां नलिनीप्रियाणां वने रतानां कुसुमोद्धतानाम् ।
मदोत्कटानां मदलालसानां गजोत्तमानां गतयोऽद्य मन्दाः ॥ ३६ ॥

प्रियान्वितानां	"பெண்யானைகளோடிருக்கின்றவைகளும்,
नलिनीप्रियाणां	தாமரையோடைகளில் ஆசையுள்ளவைகளும்,
कुसुमोद्धतानां	மலர்களால் செறுக்குற்றவைகளும்,
मदोत्कटानां	மதம் மிகுந்து
मदलालसानां	மதத்தால் செருக்குற்று
वने रतानां	காட்டில் திரியும் [ம
गजोत्तमानां	கஜசிரேஷ்டங்களு
गतयः	செய்கைகள் [டைய
अद्य	இப்பொழுது
मन्दाः	கொடியவைகளாய் இருக்கின்றன.

व्यभ्रं नभः शस्त्रविधौतवर्णं कृशप्रवाहानि नदीजलानि ।
कह्लारशीताः पवनाः प्रवान्ति तमोविमुक्ताश्च दिशः प्रकाशाः ॥ ३७ ॥

नभः व्यभ्रं	"ஆகாயம் மேகங்களில்லாததாய்
शस्त्रविधौतवर्णं	தீட்டப்பெற்ற கத்தியின் ஒளியுடையதாயிருக்கிறது.
नदीजलानि	ஆறுகளின் ஜலங்கள்
कृशप्रवाहानि	குறைந்த பிரவாகமுடையவைகளாயிருக்கின்றன.
पवनाः	காற்றுகள்
कह्लारशीताः	செங்கழுநீர் புஷ்பங்களின் குளிர்ச்சியுடையவைகளாய்
प्रवान्ति	வீசுகின்றன.
दिशः च	திக்குகளெல்லாமும்
तमोविमुक्ताः	இருள் நீங்கினவைகளாய்
प्रकाशाः	விளங்குகின்றன.

सूर्यातपक्रामणनष्टपङ्का भूमिश्चिरोद्घाटितसान्द्रेणुः ।
अन्योन्यवैरातिरुषा युतानामुद्योगकालोऽद्य नराधिपानाम् ॥ ३८ ॥

भूमिः — "பூமியான து
सूर्यातपक्रामण-नष्टपङ्का — சூரியனுடைய வெயி லின் விழ்ச்சியால் சேரு உலர்ந்ததாய்
चिरोद्घाटित-सान्द्रेणुः — தூளிகளைக் கட்டி கட் டியாய் முன்போல தோற்றுவிக்கிறது.
अन्योन्य-वैरातिरुषा युतानां — ஒருவரோடொருவர் வைரப் பொருமை கொண்ட
नराधिपानां — மன்னர்களுக்கு
अद्य — இப்போழுது
उद्योगकालः — போருக்கேற்ற காலம்.

शरद्गुणाप्यायितरूपशोभाः प्रहर्षिताः पांसुसमुक्षिताङ्गाः ।
मदोत्कटाः संप्रति युद्धलुब्धा वृषा गवां मध्यगता नदन्ति ॥ ३९ ॥

संप्रति — "இப்பொழுது
वृषाः — எருதுகள்
शरद्गुणाप्यायित-रूपशोभाः — சரத்கால குணங்க ளால் அதிகரித்த உ டலழகுடையவைக ளாய்.
प्रहर्षिताः — மிக உத்ஸாஹம்கொ ண்டவைகளாய்.
पांसुसमुक्षिताङ्गाः — உடலில் புழுதிபடிந்த வைகளாய்,
मदोत्कटाः — மதம்மிகுந்து
युद्धलुब्धाः — சண்டையில் ஆசை கொண்டவைகளாய்
गवां मध्यगताः — பசுக்களின் மத்தியிலி ருக்கின்றனவாய்
नदन्ति — எக்காவமிடுகின்றன.

समन्मथं तीव्रगतानुरागाः कुलान्विता मन्दगतिं करिण्यः ।
मदान्वितं संपरिवार्य यान्तं वनेषु भर्तारमनुप्रयान्ति ॥ ४० ॥

कुलान्विताः — "சிறந்த குலத்தில்பிற
करिण्यः — பெண்யானைகள் [ந்த
तीव्रगतानुरागाः — மிக அன்புகொண்ட
वनेषु — காடுகளில் [வைகளாய்
समन्मथं — காதலோடுகூடியதும்
मन्दगतिं — உல்லாச நடையுடை யதும்
मदान्वितं — மதம்பிடித்து
यान्तं — சென்றுகொண்டிருக் கணவனை, [கும் (ஆண்யானையை)
भर्तारं — சூழ்ந்துகொண்டு,
संपरिवार्य — பின்பற்றிச் செல்கின் றன.
अनुप्रयान्ति

त्यक्त्वा वराण्यात्मविभूषणानि वर्हाणि तीरोपगता नदीनाम् ।
निर्भर्त्स्यमाना इव सारसौघैः प्रयान्ति दीना विमदा मयूराः ॥ ४१ ॥

मयूराः — "மயில்கள்
सारसौघैः — சாரசக்கூட்டங்களால்
निर्भर्त्स्यमानाः — பயமுறுத்தி வெருட்ட ப்பட்டவைகள்
इव — போன்றவைகளாய்
नदीनां — நதிகளுடைய
तीरोपगताः — கரைகளையடைந்த வைகளாய்
विमदाः — உத்ஸாஹம் குன்றி
दीनाः — ஏக்கம் பிடித்து
आत्मविभूषणानि — தங்களுக்கு ஆபரண மாய் விளங்குகின்ற
वराणि — சிறந்த
वर्हाणि — தோகைகளை
त्यक्त्वा — பொருட்படுத்தாது,
प्रयान्ति — போகின்றன.

वित्रास्य कारण्डवचक्रवाकान् महारवैर्भिन्नकटा गजेन्द्राः ।
सरःसु बुद्धांबुजभूषणेषु विक्षोभ्य विक्षोभ्य जलं पिबन्ति ॥ ४२ ॥

भिन्नकटाः	"மதம் ஏறிய
गजेन्द्राः	யானையரசுகள்
महारवैः	பிளறுகளால்
कारण्डव-चक्रवाकान्	நீர்க்காக்கைகளையும் சக்ரவாகங்களையும்
विलास्य	அஞ்சச் செய்து,
बुद्धाम्बुज-भूषणेषु	மலர்ந்த தாமரைப் புஷ்பங்களால் அழகுவாய்ந்து விளங்கு
सरस्सु	தடாகங்களில் [கின்ற
जलं	ஜலத்தை
विक्षोभ्य विक्षोभ्य	கலக்கிக் கலக்கி,
पिबन्ति	குடிக்கின்றன.

व्यपेतपङ्कासु सवालुकासु प्रसन्नतोयासु सगोकुलासु ।
ससारसा रावविनादितासु नदीषु हृष्टा निपतन्ति हंसाः ॥ ४३ ॥

हंसाः	"ஹம்ஸங்கள்
व्यपेतपङ्कासु	சேறு நீங்கினவும்,
सवालुकासु	மணல் குன்றுகளையுடையனவும்,
प्रसन्नतोयासु	தெளிந்த நீரையுடையனவும்,
सगोकुलासु	பசுமந்தைகளையுடையனவும்,
रावविनादितासु	ஒலிகளால் பிரதித்வனி ஒலிக்கப் பெற்றவைகளுமான
नदीषु	நதிகளில்
हृष्टाः	களிப்புற்றவைகளாய்
ससारसाः	சாரசப் பக்ஷிகளோடு கூடவே
निपतन्ति	மூழ்கின்றன.

नदीघनप्रस्रवणोदकानामतिप्रवृद्धानिलबर्हिणानाम् ।
प्लवङ्गमानां च गतोत्सवानां द्रुतं रवाः संप्रति संप्रनष्टाः ॥ ४४ ॥

नदीघन-प्रस्रवणोदकानां	"நதிகளுடையவும், மேகங்களுடையவும், மலையருவிஜலங்களுடையவும்,
अतिप्रवृद्धानिल-बर्हिणानां	புசல்காற்றினுடையவும், மயில்களுடையவும்,
गतोत्सवानां	உத்ஸாஹம் குன்றிய
प्लवङ्गमानां च	தவளைகளுடையவும்,
रवाः	ஒலிகள்
संप्रति	இப்பொழுது
द्रुतं	ஏககாலத்தில்
संप्रनष्टाः	ஒய்ந்தன.

अनेकवर्णाः सुविनष्टकाया नवोदितेष्वम्बुधरेषु नष्टाः ।
क्षुधार्दिता घोरविषा बिलेभ्यश्चिरोषिता विप्रसरन्ति सर्पाः ॥ ४५ ॥

घोरविषाः	"கொடிய விஷமுள்ள
अनेकवर्णाः	அனேகஜாதி
सर्पाः	பாம்புகள்
अम्बुधरेषु	மேகங்கள்
नवोदितेषु	கிளம்பியிருக்கையில்
नष्टाः	மறைந்துகிடந்தவைகளாய்
चिरोषिताः	வெகுகாலம் ஓரிடத்தில் தங்கி
क्षुधार्दिताः	பசிமேலிட்டு
सुविनष्टकायाः	உடல் மெலிந்து
बिलेभ्यः	புற்றுகளினின்று
विप्रसरन्ति	வெளிவந்து உலாவுகின்றன.

चञ्चच्चन्द्रकरस्पर्शहर्षोन्मीलिततारका । अहो रागवती सन्ध्या जहाति स्वयमम्बरम् ॥

रागवती सन्ध्या — "மிகவும் சிவந்த சந்தியாகாலமானது
चञ्चच्चन्द्रकरस्पर्श-हर्षोन्मीलिततारका — உதிக்கும் சந்திரனது கிரணங்களின் ஸ்பர்சத்தாலுண்டான களிப்பால் நிர்மலமாகிய நக்ஷத்திரங்களையுடையதாய்
स्वयं — தானே
अम्बरं — ஆகாசத்தை
जहाति — விடுகிறது.
अहो — என்ன அழகு!

रात्रिः शशाङ्कोदितसौम्यवक्त्रा तारागणोन्मीलितचारुनेत्रा ।
ज्योत्स्नांशुकप्रावरणा विभाति नारीव शुक्लांशुकसंवृताङ्गी ॥ ४७ ॥

रात्रिः — "இரவு
शशाङ्कोदित-सौम्यवक्त्रा — உதித்த சந்திரனுகிய அழகிய முகத்தையுடையதாய்
तारागणोन्मीलित-चारुनेत्रा — "நக்ஷத்திரகணங்களாகிற நிர்மலமான அழகிய கண்களையுடையதாய்
ज्योत्स्नांशुक-प्रावरणा — நிலாவாகிற ஆடையை போர்த்தியதாய்
शुक्लांशुक-संवृताङ्गी — வெள்ளையாடையுடுத்திய மேனியையுடைய
नारी इव — ஒரு பெண் போல
विभाति — விளங்குகின்றது.

विपक्वशालिप्रसवानि भुक्त्वा प्रहर्षिता सारसचारुपङ्क्तिः ।
नभः समाक्रामति शीघ्रवेगा वातावधूता ग्रथितेव माला ॥ ४८ ॥

सारसचारुपङ्क्तिः — "அழகிய சாரசப்பறவைகளின் கூட்டங்களின் வரிசை
विपक्वशालि-प्रसवानि — முற்றின செந்நெற்கதிர்களை
भुक्त्वा — உண்டு,
प्रहर्षिता — மகிழ்ச்சியடைந்ததாய்,
शीघ्रवेगा — வேகமாய் செல்லுகின்றதாய்,
वातावधूता — காற்றினால் அலைப்புண்ட
ग्रथिता — தொடுக்கப்பட்ட
माला इव — மாலைபோல
नभः — ஆகாசத்தில்
समाक्रामति — செல்கின்றது.

सुप्तैकहंसं कुसुमैरुपेतं महाह्रदस्थं सलिलं विभाति ।
घनैर्विमुक्तं निशि पूर्णचन्द्रं तारागणाकीर्णमिवान्तरिक्षम् ॥ ४९ ॥

महाह्रदस्थं सलिलं — பெரும்மடுவில் இருக்கும் ஜலமானது
कुसुमैः उपेतं — புஷ்பங்களால் நிறையப்பெற்றதாய்
सुप्तैकहंसं — தூங்கிக்கொண்டிருக்கும் ஒரு ஹம்ஸத்தையுடையதாய்
इव — இருந்தாலெவ்வாறோ அவ்வாறே,
घनैः विमुक्तं — மேகங்கள் நீங்கிய
अन्तरिक्षं — ஆகாயமானது
निशि — இரவில்
तारागणाकीर्णं — நக்ஷத்திரகணங்களால் நிறைந்ததாய்
पूर्णचन्द्रं — முழுமதியையுடைய
विभाति — விளங்குகிறது. [தாய்

प्रकीर्णहंसाकुलमेखलानां प्रबुद्धपद्मोत्पलमालिनीनाम् ।
वाप्युत्तमानामधिकाऽद्य लक्ष्मीर्वराङ्गनानामिव भूषितानाम् ॥ ५० ॥

अद्य	"இப்பொழுது	वाप्युत्तमानां	சிறந்த வாபிகளுடைய
प्रकीर्णहंसाकुल-मेखलानां	சிதறிய ஹம்ஸங்களே மேகலைகளாக அமையப்பெற்றவைகளும்,	अधिका	அதிகமான
		लक्ष्मीः	அழகு
प्रबुद्धपद्मोत्पल-मालिनीनां	மலர்ந்த தாமரை, நெய்தல் இவைகளே மாலைகளாகவுடையவைகளுமான	भूषितानां	அலங்கரிக்கப்பட்ட
		वराङ्गनानां	அரணங்குகளுடைய தை
		इव	போலிருந்தது.

वेणुस्वनव्यञ्जिततूर्यमिश्रः प्रत्यूषकालानिलसंप्रवृद्धः ।
संमूर्च्छितो गर्गरगोवृषाणामन्योन्यमापूरयतीव शब्दः ॥ ५१ ॥

गर्गर-गोवृषाणां	"கர்கரமெனும் வாத்யங்களுடையவும், பசுக்களுடையவும், காலைகளுடையவும்,	प्रत्यूषकालानिल-संप्रवृद्धः	அதி காலையின் காற்றால் அதிகரித்ததாய்
		संमूर्च्छितः	எங்கும் பரவியதாய்
शब्दः	சப்தமானது	अन्योन्यं	ஒன்றையொன்று
वेणुस्वनव्यञ्जित-तूर्यमिश्रः	தூர்யவாத்யமாகத் தோற்றுவிக்கும் புல்லாங்குழல் ஒலியோடுகூடியதாய்	आपूरयति	விருத்திபண்ணுவது
		इव	போலிருந்தது.

नवैर्नदीनां कुसुमप्रभासैर्व्याधूयमानैर्मृदुमारुतेन ।
धौतामलक्षौमपटप्रकाशैः कूलानि काशैरुपशोभितानि ॥ ५२ ॥

नदीनां	"நதிகளின்	धौतामलक्षौम-पटप्रकाशैः	வெளுத்த சுத்தமான வெண்பட்டாடைகளைப்போலிருக்கிற வைகளுமான
कूलानि	கரைகள்		
नवैः	புதிய		
कुसुमप्रभासैः	புஷ்ப்பங்களால் ஒளி மிகுந்தவைகளும்	काशैः	காணல்களால்
मृदुमारुतेन	இளங்காற்றினால்	उपशोभितानि	அழகுவாய்ந்து விளங்குகின்றன.
व्याधूयमानैः	அலைப்புண்ட		

वनप्रचण्डा मधुपानशौण्डाः प्रियान्विताः षट्चरणाः प्रहृष्टाः ।
वनेषु मत्ताः पवनानुयात्रां कुर्वन्ति पद्मासनरेणुगौराः ॥ ५३ ॥

वनेषु	"காடுகளில்	पद्मासन-रेणुगौराः	ஆஸனமாகிய தாமரைகளின் தாதுவில் பொன்நிறமுடையவைகளாய்
षट्चरणाः	ஆண்வண்டுகள்		
वनप्रचण्डाः	வனத்தில் ஸ்வேச்சையாய் திரிபவைகளாய்	प्रियान्विताः	பெண்வண்டுகளோடு
मधुपानशौण्डाः	மதுபானத்தால் மெய்மறக்கும்	पवनानुयात्रां	காற்றை பின் [கூட தொடர்ந்து
प्रहृष्टाः	களித்து	कुर्वन्ति	செல்கின்றன.
मत्ताः	கொழுத்தவைகளாய்		

जलं प्रसन्नं कुमुदं प्रभासं क्रौञ्चस्वनः शालिवनं विपक्वम् ।
मृदुश्च वायुर्विमलश्च चन्द्रः शंसन्ति वर्षव्यपनीतकालम् ॥ ५४ ॥

प्रसन्नं	"தெளிந்த
जलं	நீரும்,
प्रभासं	மலர்ந்த
कुमुदं	ஆம்பலும், [ஒலியும்,
क्रौञ्चस्वनः	க்ரௌஞ்சப்பக்ஷியின்-
विपक्वं	முற்றிவிளைந்த
शालिवनं	சென்நெல்பயிரும்,
मृदुः	மிருதுவான
वायुः च	காற்றும்,
विमलः	களங்கமற்ற
चन्द्रः च	சந்திரனும்,
वर्षव्यपनीतकालं	மழை ஒய்ந்த காலத்தை
शंसन्ति	சூசிப்பிக்கின்றன.

मीनोपसंदर्शितमेखलानां नदीवधूनां गतयोऽद्य मन्दाः ।
कान्तोपभुक्तालसगामिनीनां प्रभातकालेष्विव कामिनीनाम् ॥ ५५ ॥

अद्य	"இப்பொழுது
मीनोपसन्दर्शित-मेखलानां	மீன்களாகிற மேகலை களை அணிந்தவைகளான
नदीवधूनां	பெண்கள்போன்ற நதிகளுடைய
गतयः	பிரவாஹங்கள்
कान्तोपभुक्तालस-गामिनीनां	கணவர்களால் அடையப்பட்ட சோம்பேரி நடையுடைய
कामिनीनां	ஸ்திரீகளின்
प्रभातकालेषु	வெடியற்காலங்களில்
इव	நடைகள்போலவே
मन्दाः	மந்தமாயிருக்கின்றன.

सचक्रवाकानि सशैवलानि काशैर्दुकूलैरिव संवृतानि ।
सपत्रलेखानि सरोचनानि वधूमुखानीव नदीमुखानि ॥ ५६ ॥

सचक्रवाकानि	"சக்கிரவாகங்கள் தங்கப்பெற்றவைகளும்,
सशैवलानि	பாசி படர்ந்திருக்கிறவைகளும்
दुकूलैः	வெண்பட்டுக்களால்
इव	போலிருக்கின்ற
काशैः	நாணல்களால் [மான
संवृतानि	சூழப்பட்டவைகளுநதीமுகங்கள்
नदीमुखानि	நதீமுகங்கள்
सरोचनानि	கோரோசனைத் திலகங்களுடையவைகளும்
सपत्रलेखानि	பச்சைகுத்திடப்பட்டவைகளுமான
वधूमुखानि	ஸ்திரீமுகங்கள்
इव	போலவேயிருக்கின்றன.

प्रफुल्लबाणासनचित्रितेषु प्रहृष्टषट्पादनिकूजितेषु ।
गृहीतचापोद्यतचण्डदण्डः प्रचण्डचारोऽद्य वनेषु कामः ॥ ५७ ॥

प्रफुल्लबाणासन-चित्रितेषु	"மலர்ந்த குருஞ்சி, வேங்கை இவைகளால் அழகுற்று விளங்குகின்றவைகளும்
प्रहृष्टषट्पाद-निकूजितेषु	களிப்புற்ற வண்டுகளின் ரீங்காரங்களோயுடையவைகளுமான
वनेषु	வனங்களில்
अद्य	இப்பொழுது
कामः	மன்மதன்
गृहीतचापोद्यत-चण्डदण्डः	கய்யில் தரித்த வில்லையுயர எடுத்து கொடிய தண்டனை விதிக்கின்றவனுய்
प्रचण्डचारः	வலுக்கொண்டு திரிகின்றன்.

लोकं सुवृष्ट्या परितोषयित्वा नदीस्तटाकानि च पूरयित्वा।
निष्पन्नसस्यां वसुधां च कृत्वा त्यक्त्वा नभस्तोयधराः प्रनष्टाः ॥ ५८ ॥

तोयधराः	"மேகங்கள்	वसुधां च	பூமியையும்
लोकं	உலகத்தை	निष्पन्नसस्यां	விளைந்த பயிருடைய தாய்
सुवृष्ट्या	நல்ல மழையால்		
परितोषयित्वा	மகிழ்த்துவிட்டு,	कृत्वा	செய்துவிட்டு,
नदीः	நதிகளையும்	नभः	ஆகாசத்தை
तटाकानि च	தடாகங்களையும்	त्यक्त्वा	விட்டு,
पूरयित्वा	நீரால் நிரப்பிவிட்டு,	प्रनष्टाः	ஒழிந்தன.

प्रसन्नसलिलाः सौम्य कुररीभिर्विनादिताः। चक्रवाकगणाकीर्णा विभान्ति सलिलाशयाः॥

सौम्य	"அப்பா!	विनादिताः	சப்திக்கப்பெற்றன வாய்
सलिलाशयाः	நீர்நிலைகள்	चक्रवाक-गणाकीर्णाः	சக்கிரவாகக்கூட்டங் களால் நிறையப் பெற்றனவாய்
प्रसन्नसलिलाः	தெளிந்த நீரையுடை யவையாய்	विभान्ति	விளங்குகின்றன.
कुररीभिः	அன்றில்களால்		

अन्योन्यबद्धवैराणां जिगीषूणां नृपात्मज। उद्योगसमयः सौम्य पार्थिवानामुपस्थितः !!

सौम्य	"அப்பா!	जिगीषूणां	வெல்ல விரும்பிய
नृपात्मज	ராஜகுமார!	पार्थिवानां	மன்னர்களுடைய
अन्योन्य-बद्धवैराणां	ஒருவரோடொருவர் வைரம்கொண்டு	उद्योगसमयः	போருக்கேற்றகாலம்
		उपस्थितः	வந்துவிட்டது.

इयं सा प्रथमा यात्रा पार्थिवानां नृपात्मज। न च पश्यामि सुग्रीवमुद्योगं वा तथाविधम् ॥

नृपात्मज	"ராஜகுமார!	प्रथमा	ஆரம்பித்துவிட்டது.
पार्थिवानां	மன்னர்களுடைய	सुग्रीवं च	சுக்ரீவனாவது
सा	அந்த	तथाविधं	அப்படிப்பட்டதாகிய
यात्रा	படையெடுத்து செல் லுதலானது	उद्योगं वा	முயற்சியையாவது
		पश्यामि न	நான் காணப்பெறுதவ னாக இருக்கின்றேன்.
इयं	இப்பொழுதே		

असनाः सप्तपर्णाश्च कोविदाराश्च पुष्पिताः। दृश्यन्ते बन्धुजीवाश्च श्यामाश्च गिरिसानुषु ॥

गिरिसानुषु	மலையடிவாரங்களில்	बन्धुजीवाः च	பந்துஜீவமரங்களும்,
असनाः	வேங்கைமரங்களும்,	श्यामाः च	ஞாழல்கொடிகளும்,
सप्तपर्णाः च	ஏழிலைப் பாலைகளும்,	पुष्पिताः	நன்கு பூத்து
कोविदाराः च	கரிங்காலிகளும்,	दृश्यन्ते	காணப்படுகின்றன.

हंससारसचक्राह्वैः कुररैश्च समन्ततः। पुलिनान्यवकीर्णानि नदीनां पश्य लक्ष्मण ॥६३॥

लक्ष्मण	"லக்ஷ்மணு!
हंससारस-चक्राह्वैः	ஹம்ஸம், ஸாரஸம், சக்கிரவாகம் என் கிற பக்ஷிகளாலும்,
कुररैः च	அன்றில்களாலும்
समन्ततः	எங்கு பார்த்தாலும்
अवकीर्णानि	நிறைந்து விளங்கு
नदीनां	நதிகளுடைய [கின்ற
पुलिनानि	மணல்க்குன்றுகளை
पश्य	பார்.

चत्वारो वार्षिका मासा गता वर्षशतोपमाः। मम शोकाभिभूतस्य सौम्य सीतामपश्यतः ॥

सौम्य	"அப்பா!
सीतां	சீதையை
अपश्यतः	காணாது
शोकाभिभूतस्य	சோகத்தில் மூழ்கிக் கிடக்கும்
मम	எனக்கு
चत्वारः	நான்கு
वार्षिकाः	மழைக்காலத்திய
मासाः	மாதங்களும்
वर्षशतोपमाः	நூறு வருஷங்கள் போல
गताः	கழிந்தன.

चक्रवाकीव भर्तारं पृष्ठतोऽनुगता वनम्। विषमं दण्डकारण्यमुद्यानमिव चाङ्गना ॥ ६५ ॥

अङ्गना	"எழில்மங்கையாகும் அவள்
चक्रवाकी	சக்கிரவாகப்பேடு
भर्तारं	சேவலை
इव	எவ்வாறே அவ்வாறே
विषमं	கொடிய
दण्डकारण्यं	தண்டகாரண்யம்
वनं	வனத்திற்கு [எனும்
उद्यानं	பூஞ்சோலைக்கு
इव च	எங்ஙனமோ அங்
पृष्ठतः	பின்பற்றி [ஙனமே
अनुगता	தொடர்ந்துவந்தாள்.

प्रियाविहीने दुःखार्ते हृतराज्ये विवासिते। कृपां न कुरुते राजा सुग्रीवो मयि लक्ष्मण ॥

लक्ष्मण	"லக்ஷ்மண!
प्रियाविहीने	மனைவியை விட்டுப் பிரிந்து
दुःखार्ते	துயரப்பட்டுக்கொண் டிருப்பவனும்,
हृतराज्ये	ராஜ்யத்தை இழந்து
विवासिते	காட்டிற்கு அனுப்பப் பட்டவனுமாகிய
मयि	என் விஷயத்தில்,
सुग्रीवः राजा	சுக்ரீவமன்னன்
कृपां	கிருபையை
न कुरुते	செய்யாதிருக்கிறான்.

अनाथो हृतराज्योऽयं रावणेन च धर्षितः। दीनो दूरगृहः कामी मां चैव शरणं गतः ॥
इत्येतैः कारणैः सौम्य सुग्रीवस्य दुरात्मनः। अहं वानरराजस्य परिभूतः परन्तप ॥६८॥

परन्तप	"சத்ருக்களைத் தவிக் கச்செய்பவனே!
सौम्य	அப்பா!
अयं	இந்த
अहं	நான்
अनाथः	அனாதனாகவும்
हृतराज्यः	ராஜ்யத்தைப் பறி கொடுத்தவனாகவும்
रावणेन	ராவணனால்
धर्षितः च	வஞ்சிக்கப்பட்டவனா கவும்

दीनः — கய்யாலாகாதவனுகவும்
दूरगृहः — தூரதேசத்தனுகவும்
कामी
मां च — தன்னையே
शरणं गतः एव — சரணமாய் அடைந்து விட்டவனுகவும்
इति एतैः — இவைகளாகிற இந்த
कारणैः — எண்ணங்களால்
दुरात्मनः — கெட்ட நோக்குடைய
वानरराजस्य — வானரமன்னனுகிய
सुग्रीवस्य — சுக்ரீவனது
परिभूतः — அவமதிப்பிற்குப் பாத்திரமாயிருக்கிறேன்.

स कालं परिसंख्याय सीतायाः परिमार्गणे। कृतार्थः समयं कृत्वा दुर्मतिर्नावबुध्यते ॥

सः — "அவன்
सीतायाः — சீதையை
परिमार्गणे — தேடும் விஷயத்தில்
समयं कृत्वा — உறுதிகூறிவிட்டு,
कालं — ஏற்றகாலத்தை
परिसंख्याय — தீர்மானித்துவிட்டு,
कृतार्थः — தனது மனேரதங்கள் கைக்கூடப்பபற்றவனுப்
दुर्मतिः — தீய எண்ணமுடையவனுப்
अवबुध्यते न — கவனியாதிருக்கின்றன்.

त्वं प्रविश्य च किष्किन्धां ब्रूहि वानरपुङ्गवम्। मूर्खं ग्राम्यसुखे सक्तं सुग्रीवं वचनान्मम ॥

त्वं च — "நீயே
किष्किन्धां — கிஷ்கிந்தைக்கு
प्रविश्य — சென்று,
ग्राम्यसुखे — அல்பசுகத்தில்
सक्तं — முழுகிக்கிடக்கும்
मूर्खं — அசடாகிய
वानरपुङ्गवं — வானரத்தலவனுகிய
सुग्रीवं — சுக்ரீவனிடம்
मम वचनात् — நான் சொன்னதாகப் பின்வருமாறு
ब्रूहि — சொல்லுவாயாக.

अर्थिनामुपपन्नानां पूर्वं चाप्युपकारिणाम्। आशां संश्रुत्य यो हन्ति स लोके पुरुषाधमः ॥

यः — "'எவனெருவன்
पूर्वं — முதலில்
उपकारिणां — உபகாரம் செய்தவர்களும்
अर्थिनां अपि — கைம்மாறை வேண்டுகின்றவர்களுமான
उपपन्नानां — உரியவர்களுக்கு
आशां — மனேரதத்தை
संश्रुत्य — வாக்களித்துவிட்டு
हन्ति — செய்யாதொழிகின்றனே
सः च — அவன்தான்
लोके — உலகின்
पुरुषाधमः — மானிடப்பதர்.

शुभं वा यदि वा पापं यो हि वाक्यमुदीरितम्। सत्येन परिगृह्णाति स वीरः पुरुषोत्तमः ॥

यः — "'எந்த
वीरः — தர்மவீரன்
उदीरितं — வாக்களிக்கப்பட்ட
वाक्यं — சொல்லை
शुभं वा — சுலபமாயிருந்தாலும் சரி,
पापं यदि वा — கஷ்டமாயிருந்தாலும் சரி
सत्येन — சொன்னபடியே
परिगृह्णाति — செய்துமுடிக்கின்றனே
सः हि — அவன்தான்
पुरुषोत्तमः — புருஷோத்தமன்.

कृतार्था ह्यकृतार्थानां मित्राणां न भवन्ति ये। तान्मृतानपि क्रव्यादाः कृतघ्नान्नोपभुञ्जते॥

ये	"'எவர்கள்	भवन्ति न	ஆகின்றார் இல்லையோ
अकृतार्थानां	செய்யவேண்டிய காரியங்களை செய்துமுடிக்கப்பெறாதவர்களான	तान्	அந்த
		कृतघ्नान्	செய்தநன்றி மறந்தவர்களை
		मृतान् अपि	பிணமாய்ப் போனவர்களாயினும்
मित्राणां	உதவிபுரிந்தவர்களுக்கு	क्रव्यादाः हि	மாம்சத்தை புஜிக்கும் நாய்நரிகள்கூட
कृतार्थाः	கைமாறுசெய்தவர்களாய்	उपभुञ्जते न	தீண்டமாட்டாது.

नूनं काञ्चनपृष्ठस्य विकृष्टस्य मया रणे। द्रष्टुमिच्छति चापस्य रूपं विद्युद्गणोपमम्॥७४॥

रणे	"'போரில்	विद्युद्गणोपमं	மின்னல்கணங்களுக்
मया	என்னால்	रूपं	ரூபத்தை [கொப்பான
विकृष्टस्य	வளைக்கப்பட்ட	द्रष्टुं	நேரில் கண்டுகொள்ள
काञ्चनपृष्ठस्य	பொன் பின்புறமுள்ள	इच्छति नूनं	விரும்புகிறான் போலும்.
चापस्य	வில்லினது		

घोरं ज्यातलनिर्घोषं क्रुद्धस्य मम संयुगे। निर्घोषमिव वज्रस्य पुनः संश्रोतुमिच्छति॥

संयुगे	"'போரில்	निर्घोषं	முழுக்கத்தை
क्रुद्धस्य	சினங்கொண்ட	इव	நிகர்த்ததுமான
मम	எனது	ज्यातलनिर्घोषं	நாணின் ஓசையை
घोरं	அசஹ்யமான தீங்கை விளைவிக்க வல்லதும்,	संश्रोतुं	கேட்க
		इच्छति पुनः	விரும்புகின்றான் போலும்.'
वज्रस्य	வஜ்ராயுதத்தினுடைய		

काममेवं गतेऽप्यस्य परिज्ञाते पराक्रमे। त्वत्सहायस्य मे वीर न चिन्ता स्यान्नृपात्मज॥

वीर	"சூரனே!	परिज्ञाते	யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதான
नृपात्मज	ராஜகுமார!	पराक्रमे	பராக்கிரமவிஷயத்தில்
त्वत्सहायस्य	உன்னைத் துணையாகக் கொண்ட	अस्य	இவனுக்கு
		चिन्ता अपि	அரளுதலென்பதே
मे	எனக்கு	कामं स्यात् न	எள்ளளவும் உண்டாகவில்லை.
एवं गते	இப்படிப்பட்டதாய்		

यदर्थमयमारम्भः कृतः परपुरंजय। समयं नाभिजानाति कृतार्थः प्लवगेश्वरः॥ ७७॥

परपुरञ्जय	"எப்பவும் எதிலும் ஜயசாலியே!	समयं	அவனது பிரதிக்ஞையை
यदर्थं	எதுகாரணமாய்	प्लवगेश्वरः	வானரமன்னன்
अयं	இந்த	कृतार्थः	தன் காரியம்கைகூடப் பெற்றவனும்
आरम्भः	(வாலி) வதையானது		
कृतः	செய்யப்பட்டதோ, அந்த	अभिजानाति न	மறந்துவிட்டான்.

वर्षासमयकालं तु प्रतिज्ञाय हरीश्वरः। व्यतीतांश्चतुरो मासान्विहरन्नावबुध्यते ॥ ७८ ॥

तु	"இவ்விஷயத்தில்
वर्षासमयकालं	மழைக்காலம் கழிந்து அடுத்தகாலத்தை
प्रतिज्ञाय	பிரதிக்ஞைசெய்து விட்டு,
हरीश्वरः	வானரமன்னன்
विहरन्	சிற்றின்பத்தில்பொழு துபோக்கிக்கொண்டு
चतुरः	நான்கு
मासान्	மாதங்களும்
व्यतीतान्	கழித்துவிட்டதை
अवबुध्यते न	நினையாதிருக்கின்றன்.

सामात्यपरिषत्क्रीडन्पानमेवोपसेवते। शोकदीनेषु नास्मासु सुग्रीवः कुरुते दयाम् ॥७९॥

सुग्रीवः	"சுக்ரீவன்
सामात्यपरिषत्	அரண்மனையிலுள்ள பரிஜனங்களோடு கூடினவனும்
क्रीडन्	சிற்றின்பத்தில் காலத் தைக்கழித்துக்கொ ண்டு
पानं एव	குடிப்பதிலேயே
उपसेवते	மூழ்கிக்கிடக்கிறன்.
शोकदीनेषु	சோகத்தால் தபிக்கும்
अस्मासु	நம் விஷயத்தில்
दयां	கிருபையை
कुरुते न	செய்யாதிருக் கின்றன்.

उच्यतां गच्छ सुग्रीवस्त्वया वत्स महाबल । मम रोषस्य यद्रूपं ब्रूयाश्चैनमिदं वचः ॥

महाबल	"மகாசக்திவாஞ்சிய
वत्स	குழந்தாய்!
गच्छ	நீயே போய்வா.
त्वया	உன்னால்
सुग्रीवः	சுக்ரீவன்
मम	எனது
रोषस्य	கோபத்தினது
रूपं	ஸ்வரூபம்
यत्	எதுவோ அது
उच्यतां	சொல்லப்படட்டும்.
एनं	இவனிடம்
इदं	பின்வரும்
वचः च	சொல்லையும்
ब्रूयाः	நீ சொல்வாயாக.

न च संकुचितः पन्था येन वाली हतो गतः। समये तिष्ठ सुग्रीव मा वालिपथमन्वगाः ॥

सुग्रीव	"சுக்ரீவ!
येन	எந்த வழியாய்
वाली	வாலி
हतः	கொல்லப்பட்டு
गतः	சென்றானோ, அந்த
पन्थाः च	வழி இன்னும்
संकुचितः न	அடைப்பட்டுப் போகவில்லை.
समये	சொன்னபடி நடப்
तिष्ठ	கிலையாய் நில்? [பதில்
वालिपथं	வாலியின் வழியை
अन्वगाः मा	நீ பின்பற்றாதே.

एक एव रणे वाली शरेण निहतो मया। त्वां तु सत्यादतिक्रान्तं वधिष्यामि सबान्धवम्॥

मया	"என்னால்
रणे	போரில்
शरेण	ஒரு பாணத்தால்
वाली	வாலி [யாய்
एकः एव	ஒருவன் மட்டும் தனி-
निहतः	கொல்லப்பட்டான்.
सत्यात्	சொன்ன சொல்லி
अतिक्रान्तं	தடுமாறிய [லிருந்து
त्वां तु	உன்னையே வென்றால்
सबान्धवं	சுற்றத்தாரோடு சேர்த்தே
वधिष्यामि	கொல்லப்போகிறேன்'

तदेवं विहिते कार्ये यद्धितं पुरुषर्षभ। तत्तद्ब्रूहि नरश्रेष्ठ त्वर कालव्यतिक्रमः ॥ ८३ ॥

नरश्रेष्ठ	"மானிடர்களில் எனக்கு மிகவும் அருமையான	यत्	எதுவோ,
		तत् तत्	அதையெல்லாம்
पुरुषर्षभ	புருஷோத்தம!	ब्रूहि	நேரில் தெரிவி.
तत्	ஆகையால்		
एवं	இப்படியாய்		
कार्ये विहिते	காரியம் இருக்கையில்	कालव्यतिक्रमः	காலம் ஏற்கனவே வீணில் கழிந்துவிட்டது;
हितं	நன்மை செயதவனுக்கு ஏற்ற உபகாரம்	त्वर	அவசரப்படு.

कुरुष्व सत्यं मयि वानरेश्वर प्रतिश्रुतं धर्ममवेक्ष्य शाश्वतम्।
मा वालिनं प्रेत्य गतो यमक्षयं त्वमद्य पश्ये मम चोदितैः शरैः ॥ ८४ ॥

वानरेश्वर	"'வானரமன்னனே!	अद्य	இப்பொழுது
मयि	என் விஷயத்தில்	त्वं	நீயும்
प्रतिश्रुतं	வாக்களித்ததை	मम	எனது
शाश्वतं	எதையும் அளிக்க வல்லதாகிய	चोदितैः	ஆக்ஞையைக் கொண்டு வெளிவரும்
धर्मं	தர்ம்மமொன்றையே	शरैः	பாணங்களால்
अवेक्ष्य	சர்வவுமாய்க் கொண்டு,	प्रेत्य	மாண்டு,
सत्यं	பிரயோஜனம் பெற்றதாய்	यमक्षयं	யமலோகத்தை
		गतः	அடைந்து
कुरुष्व	செய்வாயாக.	वालिनं	வாலியை நேரில்
		मा पश्येः	தரிசிக்கவேண்டாம்'".

स पूर्वजं तीव्रविवृद्धकोपं लालप्यमानं प्रसमीक्ष्य दीनम्।
चकार तीव्रां मतिमुग्रतेजा हरीश्वरे मानववंशवर्धनः ॥ ८५ ॥

मानववंश-वर्धनः	மனுவம்சத்தைப் பெருமைப்படுத்துகின்றவரும்	दीनं	உள்ளமுருகி
		लालप्यमानं	புலம்பிக்கொண்டிருக்கிறவராகவும்
उग्रतेजाः	மகா கோபிஷ்டருமாகிய	प्रसमीक्ष्य	நன்கு கவனித்து,
		हरीश्वरे	வானர மன்னன் விஷயத்தில்
सः	அவர்		
पूर्वजं	தமயனுரை	तीव्रां	மிகக் கொடுமையான
तीव्रविवृद्धकोपं	அளவுகடந்த கோபத்திலிருப்பவராகவும்,	मतिं	தீர்மானத்தை
		चकार	கொண்டுவிட்டார்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
किष्किन्धाकाण्डे त्रिंशः सर्गः ॥

आदितः श्लोकाः 10597 किष्किन्धाकाण्डे आदितः श्लोकाः 1345

एकत्रिंशः सर्गः—முப்பத்தியோராவது ஸர்க்கம் ॥ ३१ ॥

अङ्गदेन क्रुद्धस्य लक्ष्मणस्यागमनकथनम्—அங்கதன் சினங்கொண்ட லக்ஷ்மணரின் வரவைத் தெரிவிப்பது.

स कामिनं दीनमदीनसत्त्वं शोकाभिपन्नं समुदीर्णकोपम् ।
नरेन्द्रसूनुर्नरदेवपुत्रं रामानुजः पूर्वजमित्युवाच ॥ १ ॥

नरेन्द्रसूनुः	ராஜகுமாரரும்	**अदीनसत्त्वं**	அப்பவும் மனச் சோர்வடையாது
रामानुजः	ஸ்ரீராமர் தம்பியுமா	**समुदीर्णकोपं**	கோபமதிகரித்தவரும்
सः	அவர், [கிய	**नरदेवपुत्रं**	சக்கிரவர்த்தியின் புதல்வருமான
कामिनं	மனைவியிடம் அதிக வாத்ஸல்யமுடைய வரும்	**पूर्वजं**	தமயனுரைப் பார்த்து
शोकाभिपन्नं	சோகத்தில் மூழ்கி	**इति**	பின்வருமாறு
दीनं	மனம் நொந்து	**उवाच**	சொன்னர்.

न वानरः स्थास्यति साधुवृत्ते न मंस्यते कर्मफलानुषङ्गान् ।
न भोक्ष्यते वानरराज्यलक्ष्मीं तथा हि नाभिक्रमतेऽस्य बुद्धिः ॥ २ ॥

वानरः	"வானரன்	**वानरराज्यलक्ष्मीं**	வானரராஜ்ய லக்ஷ்மியை
साधुवृत्ते	நல்லோர்களொழுகும் வழியில்	**भोक्ष्यते न**	அவன் அனுபவிக்கப் போகிறதில்லை.
स्थास्यति न	நிலைநிற்கமாட்டான்.	**तथा हि**	அப்படியிருப்பதால்
कर्मफलानुषङ्गान्	எக்காரியத்தினுல் தற் கால பயன் கிடைத் திருக்கிறது என்ற உணர்வுகளை	**अस्य**	இவனது [தான்
		बुद्धिः	புத்தி
		अभिक्रमते न	நல்வழியில் செல் லாதிருக்கின்றது.
मंस्यते न	அவன் அறியான்.		

मतिक्षयाद्ग्राम्यसुखेषु सक्तस्तव प्रसादाप्रतिकारबुद्धिः ।
हतोऽग्रजं पश्यतु वीर वालिनं न राज्यमेवं विगुणस्य देयम् ॥ ३ ॥

वीर	"சூரரே !	**प्रसादाप्रतिकार-बुद्धिः**	அனுக்கிரகத்திற்குப் பிரதி உபகாரம் செய்யாத எண்ணமுடையவனுகிய அவன்
एवं	இப்படிப்பட்ட		
विगुणस्य	தற்புத்தியுடைய		
राज्यं	ராஜ்யமானது [னுக்கு		
न देयं	கொடுக்கத்தக்க தன்று;	**हतः**	கொல்லப்பட்டவனும்
मतिक्षयात्	புத்திக்குறைவால்	**अग्रजं**	தமயனுகிய
ग्राम्यसुखेषु	சிற்றின்பங்களில்	**वालिनं**	வாலியை
सक्तः	மூழ்கிக் கிடக்கின்றவ	**पश्यतु**	நேரில் சென்று காணட்டும்.
तव	தேவரீரது [னும்		

न धारये कोपमुदीर्णवेगं निहन्मि सुग्रीवमसत्यमद्य।
हरिप्रवीरैः सह वालिपुत्रो नरेन्द्रपुत्र्या विचयं करोतु ॥ ४ ॥

उदीर्णवेगं	"அதி உக்ரமாய் எற்பட்டுள்ள	सुग्रीवं	சுக்ரீவனை
कोपं	கோபத்தை	निहन्मि	கொல்லுகின்றேன்.
धारये न	நான் அடக்கமுடியா திருக்கிறேன்.	वालिपुत्रः	வாலியின் புதல்வன்
अद्य	இப்பொழுதே	हरिप्रवीरैः	வானரோத்தமர்க
असत्यं	சொன்னசொல் தவறிய	सह	கூட [ளோடு
		नरेन्द्रपुत्र्याः	ராஜகுமாரியினது
		विचयं	தேடுதலை
		करोतु	செய்யட்டும்".

तमात्तबाणासनमुत्पतन्तं निवेदितार्थं रणचण्डकोपम्।
उवाच रामः परवीरहन्ता स्ववेक्षितं सानुनयं च वाक्यम् ॥ ५ ॥

परवीरहन्ता	சத்துருவீரர்களை	उत्पतन्तं	கிளம்பிய
रामः	ஸ்ரீராமர் [வேரறுக்கும்	तं	அவரைப் பார்த்து
निवेदितार्थं	தனது அபிப்பிராயத் தை வெளியிட்டவரும்	स्ववेक्षितं	தீர்க்காலோசனையின் பயனையிருக்கிறதும்
रणचण्डकोपं	போரில் ஆவேசம் கொண்டு கோபமுற் றவரும்	सानुनयं च	நல்லொழுக்கத்தை உபதேசிக்கிறதுமாகிய
आत्तबाणासनं	வில்லை தயாராய் எடுத் துக்கொண்டு	वाक्यं	பின்வரும் சொல்லை
		उवाच	சொன்னர்.

न हि वै त्वद्विधो लोके पापमेवं समाचरेत्। पापमार्येण यो हन्ति स वीरः पुरुषोत्तमः ॥

लोके	"உலகில்	आर्येण	பெருந்தன்மையால்
त्वद्विधः	உன்னைப்போன்ற ஒருவன்	पापं	தீய எண்ணத்தை
एवं	இப்படிப்பட்டதாகிய	हन्ति वै	ஒழிக்கின்றனே
पापं	அடாத செயலை	सः हि	அவன்தான்
समाचरेत् न	தீர்மானிக்கமாட்டான்.	वीरः	தர்மவீரன்;
यः	எவனொருவன்	पुरुषोत्तमः	புருஷோத்தமன்.

नेदमद्य त्वया ग्राह्यं साधुवृत्तेन लक्ष्मण। तां प्रीतिमनुवर्तस्व पूर्ववृत्तं च सङ्गतम् ॥ ७ ॥

लक्ष्मण	"லக்ஷ்மண!	पूर्ववृत्तं	முன்நடந்த
साधुवृत्तेन	நல்லொழுக்கமுடைய	सङ्गतं च	கூட்டுறவையும்
त्वया	உன்னால்	तां	அந்த
अद्य	இப்பொழுது	प्रीतिं	அவனிடத்திலுள்ள அன்பையும்
इदं	இது		
न ग्राह्यं	கொள்ளத்தக்கதன்று.	अनुवर्तस्व	பெருமைப்படுத்து.

सामोपहितया वाचा रूक्षाणि परिवर्जयन् । वक्तुमर्हसि सुग्रीवं व्यतीतं कालपर्यये ॥ ८ ॥

कालपर्यये	"காலம் கடந்துவிட்ட விஷயத்தில்	परिवर्जयन्	முற்றிலும் விட்டொழித்து
व्यतीतं	கவனியாதிருக்கின்ற	सामोपहितया	சாந்தகுணத்தால் வெளிவரும்
सुग्रीवं	சுக்ரீவனிடம்	वाचा	சொற்கொண்டு
रूक्षाणि	மனதைப் புண்படுத்தும் சொற்களை	वक्तुं अर्हसि	நீ சம்பாஷிக்க வேண்டும்."

सोऽग्रजेनानुशिष्टार्थो यथावत्पुरुषर्षभः । प्रविवेश पुरीं वीरो लक्ष्मणः परवीरहा ॥ ९ ॥

परवीरहा	சத்ருவீரர்களையொழிப்பவரும்,	यथावत्	சாஸ்த்திரமுறைப்படி
वीरः	சூரரும்	अग्रजेन	தமயனரால்
पुरुषर्षभः	புருஷோத்தமரு	अनुशिष्टार्थः	நுட்பங்களை உபதேசிக்கப்பெற்றவராய்
सः	அந்த [மாகிய	पुरीं	நகருக்கு
लक्ष्मणः	லக்ஷ்மணர்	प्रविवेश	சென்றார்.

ततः शुभमतिः प्राज्ञो भ्रातुः प्रियहिते रतः । लक्ष्मणः प्रति संरब्धो जगाम भवनं कपेः ॥

शुभमतिः	நற்புத்தியுடையவரும்	भ्रातुः	தமயனது
प्राज्ञः	பிராக்ஞருமான	प्रियहिते	மனம்கோணது நடக்கும் விஷயத்தில்
लक्ष्मणः	லக்ஷ்மணர்	रतः	ஆஸக்தியுடையவராய்
ततः	அப்பவும்	कपेः	வானரத்தினது
संरब्धः	கோபாவேசத்திலிருக்கின்றவராய்	भवनं प्रति	மாளிகையை நோக்கி
		जगाम	சென்றார்.

शक्रबाणासनप्रख्यं धनुः कालान्तकोपमः । प्रगृह्य गिरिशृङ्गाभं मन्दरः सानुमानिव ॥
यथोक्तकारी वचनमुत्तरं चैव सोत्तरम् । बृहस्पतिसमो बुद्ध्या मत्वा रामानुजस्तथा ॥
कामक्रोधसमुत्थेन भ्रातुः कोपाग्निना वृतः । प्रभञ्जन इवाप्रीतः प्रययौ लक्ष्मणस्तदा ॥

तदा	அப்பொழுது	कामक्रोध-समुत्थेन	அன்பினதிசயத்தாலும், கோபத்தாலும் வெளிவந்த
रामानुजः	ஸ்ரீராமரின் தம்பியும்,	कोपाग्निना	கோபத்தியால்
बृहस्पतिसमः	பிருகஸ்பதியை நிகர்த்தவரும்	वृतः	பற்றப்பட்டு [வராய்
मन्दरः	மந்தர	अप्रीतः	உத்ஸாஹம் ஒழிந்த-
सानुमान्	மலை	शक्रबाणासनप्रख्यं	இந்திரனது வில்லை நிகர்த்ததும்
इव	போன்றவருமான	गिरिशृङ्गाभं	மலைக்கொடுமுடியை நிகர்த்ததுமான
लक्ष्मणः	லக்ஷ்மணர்		
भ्रातुः	தமயனரது		

धनुः	வில்லை
कालान्तकोपमः	எமன்போன்றவராய்
प्रगृह्य	கையிலெடுத்துக் கொண்டு
सोत्तरं च	விசேஷமான பிரயோஜனத்தோடுகூடியதும்
उत्तरं एव	சர்வோத்கிருஷ்டவுமான
वचनं	(ஸ்ரீராமரது) நியமனத்தை
बुद्ध्या	நுண்ணறிவால்
मत्वा	நினைத்து
तथा	அப்படியே
यथोक्तकारी	சொல்லப்பட்டவண்ணமே செய்கிறவராய்
प्रभञ्जनः	காற்று
इव	போலவே
प्रययौ	நடந்தார்.

सालतालाश्वकर्णांश्च तरसा पातयन् बहून्। पर्यस्यन् गिरिकूटानि द्रुमानन्यांश्च वेगतः ॥
शिलाश्च शकलीकुर्वन् पद्भ्यां गज इवाशुगः। दूरमेकपदं त्यक्त्वा ययौ कार्यवशाद्धृतम् ॥

कार्यवशात्	காரியத்தின் பெருமையால்
बहून्	அனேக
सालतालाश्वकर्णान् च	ஆச்சா, பனை, அச்வகர்ணம் இவைகளையும்
अन्यान्	இன்னும் இதர
द्रुमान् च	மரங்களையும்
तरसा	வேகமாய்
पातयन्	பேர்த்துக்கொண்டும்
गिरिकूटानि	மலைசிகரங்களை
वेगतः	வேகமாய்
पर्यस्यन्	சுற்றிக்கொண்டும்
एकपदं	ஒவ்வொரு அடியையும்
दूरं त्यक्त्वा	எட்டி எட்டி வைத்துக் கொண்டு,
आशुगः	வேகமாய் நடக்கின்ற
गजः इव	யானைபோல் [வராய்
पद्भ्यां	இரு கால்களாலும்
शिलाः	சிறு கற்களை
शकलीकुर्वन् च	உருட்டித்தள்ளிக் கொண்டே
द्रुतं	வேகமாய்
ययौ	நடந்தார்.

तामपश्यद्ध्वलाकीर्णां हरिराजमहापुरीम्। दुर्गामिक्ष्वाकुशार्दूलः किष्किन्धां गिरिसङ्कटे॥

इक्ष्वाकुशार्दूलः	இக்ஷ்வாகுவம்சத்திலகராகுமவர்
हरिराजमहापुरीं	வானரமன்னனது ராஜதானியும்
बलाकीर्णां	சைனியங்களால் நிறைந்துள்ளதும்
गिरिसङ्कटे	இருமலைகளினிடுக்கில்
दुर्गां	புகுதற்கரியதாயிருக்கிறதுமான
तां	அந்த [கிறதுமான
किष्किन्धां	கிஷ்கிந்தையை
अपश्यत्	பார்த்தார்.

रोषात्प्रस्फुरमाणोष्ठः सुग्रीवं प्रति लक्ष्मणः। ददर्श वानरान्भीमान्किष्किन्धाया बहिश्चरान्॥

किष्किन्धायाः	கிஷ்கிந்தையினது
बहिश्चरान्	வெளியில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்ற
भीमान्	கொடிய
वानरान्	வானரர்களை
ददर्श	கண்டார்.
लक्ष्मणः	லக்ஷ்மணர்
सुग्रीवं प्रति	சுக்ரீவனை நினைத்து
रोषात्	சினத்தால்
प्रस्फुरमाणोष्ठः	உதடுதுடித்தார்.

तं दृष्ट्वा वानराः सर्वे लक्ष्मणं पुरुषर्षभम् । शैलशृङ्गाणि शतशः प्रवृद्धांश्च महीरुहान् ॥
जगृहुः कुञ्जरप्रख्या वानराः पर्वतान्तरे ॥ १८ ॥

पर्वतान्तरे	பர்வதத்தினிடுக்கி லிருந்த	तं लक्ष्मणं	அந்த லக்ஷ்மணரை
		दृष्ट्वा	பார்த்து,
कुञ्जरप्रख्याः	யானைகளை நிகர்த்த	शैलशृङ्गाणि	மலைச்சிகரங்களையும்
वानराः	வானரர்களும்	प्रवृद्धान्	மிகப் பெரிய
वानराः	மற்றுமுள்ள வானரர் கள்	महीरुहान् च	விருக்ஷங்களையும்
		शतशः	நூற்றுக்கணக்காக
सर्वे	எல்லோரும்	जगृहुः	எடுத்துக்கொண் டார்கள்.
पुरुषर्षभं	புருஷோத்தமராகிய		

तान् गृहीतप्रहरणान् हरीन् दृष्ट्वा तु लक्ष्मणः । बभूव द्विगुणं क्रुद्धो वह्निन्धन इवानलः ॥

लक्ष्मणः	லக்ஷ்மணர்	दृष्ट्वा	பார்த்து,
तु	அப்பொழுது	वह्निन्धनः	அதிகமாய் விறகுகூட்ட ப்பட்ட
तान्	அந்த		
हरीन्	வானரர்களை	अनलः इव	தீயென
गृहीतप्रहरणान्	அடிப்பதற்கேற்ற கருவிகளைக் கையில் கொண்டிருக்கின்றவர்களாக	द्विगुणं	இருமடங்கு
		क्रुद्धः	சினங்கொண்டவராக
		बभूव	ஆயினர்.

तं ते भयपरीताङ्गाः क्रुद्धं दृष्ट्वा प्लवङ्गमाः । कालमृत्युयुगान्ताभं शतशो विद्रुता दिशः ॥

ते प्लवङ्गमाः	அந்த வானரர்கள்	भयपरीताङ्गाः	உள்ளம் நடுங்கியவர் களாய்
तं	அவரை		
कालमृत्युयुगान्ताभं	யுகாந்தகாலத்திய யமனை நிகர்த்து	दिशः	எல்லா திக்குகளிலும்
		शतशः	நூற்றுக்கணக்காக
क्रुद्धं	சினங்கொண்டிருப்	विद्रुताः	ஓடிப்போய்விட்டார் கள்.
दृष्ट्वा	பார்த்து, [பவராய்		

ततः सुग्रीवभवनं प्रविश्य हरिपुङ्गवाः । क्रोधमागमनं चैव लक्ष्मणस्य न्यवेदयन् ॥ २१ ॥

ततः	அப்பொழுது	लक्ष्मणस्य	லக்ஷ்மணருடைய
हरिपुङ्गवाः	வானரோத்தமர்கள்	आगमनं च	வரவையும்
सुग्रीवभवनं	சுக்ரீவனது மாளி	क्रोधं एव	கோபத்தையும்
प्रविश्य	சென்று [கைக்கு	न्यवेदयन्	தெரிவித்தார்கள்.

तारया सहितः कामी सक्तः कपिवृषो रहः । न तेषां कपिवीराणां शुश्राव वचनं तदा ॥

तदा	அப்பொழுது	कपिवृषः	வானரோத்தமன்
कामी	பெண்பித்தனும்	तेषां	அந்த
तारया	தாரையோடு	कपिवीराणां	வானர வீரர்களின்
सहितः	கூடி	वचनं	சொல்லை
रहः	ஏகாந்தத்தில்	शुश्राव न	காதில் போட்டுக் கொள்ளவில்லை.
सक्तः	மூழ்கிக் கிடந்த		

ततः सचिवसंदिष्टा हरयो रोमहर्षणाः। गिरिकुञ्जरमेघाभा नगर्या निर्ययुस्तदा ॥२३॥

तदा	அப்பொழுது
गिरिकुञ्जर-मेघाभाः	மலைகளையும், யானைகளையும், மேகங்களையும் நிகர்த்து
रोमहर्षणाः	பயங்கரமாயிருக்கின்ற
हरयः	வானரர்கள்
सचिवसन्दिष्टाः	மந்திரிகளது ஆக்ஞை பெற்றவர்களாய்
ततः	அந்த
नगर्याः	பட்டணத்திலிருந்து
निर्ययुः	வெளிப் புறப்பட்டார்கள்.

नखदंष्ट्रायुधा वीराः सर्वे विकृतदर्शनाः। सर्वे शार्दूलदर्पाश्च सर्वे च विकृताननाः ॥२४॥

सर्वे	எல்லோரும்
वीराः	சூரர்கள்;
नखदंष्ट्रायुधाः	நகங்களையும் பற்களையும் ஆயுதமாகவுடையவர்கள்;
विकृतदर्शनाः	பயங்கரமான தோற்றமுடையவர்கள்;
सर्वे च	எல்லோருமே
शार्दूलदर्पाः	புலிகளின் வலிமையுடையவர்கள்;
सर्वे च	எலலோருமே
विकृताननाः	கோரமான முகங்களுடையவர்கள்.

दशनागबलाः केचित्केचिद्दशगुणोत्तराः। केचिन्नागसहस्रस्य बभूवुस्तुल्यविक्रमाः ॥२५॥

केचित्	சிலர்
दशनागबलाः	பத்து யானை பலமுடையவர்களாயும்,
केचित्	சிலர்
दशगुणोत्तराः	அதற்குப் பத்துமடங்கு மேலானவர்களாயும்,
केचित्	சிலர்
नागसहस्रस्य	ஆயிரம் யானைகளை
तुल्यविक्रमाः	நிகர்த்த பராக்கிரமமுடையவர்களாயும்
बभूवुः	இருந்தனர்.

सन्ति चौघबलाः केचित्केचिद्वायुबलोत्तराः। अप्रमेयबलाः केचित्त्रासन्हरिपुङ्गवाः ॥

केचित्	சிலர்
ओघबलाः च	பலர்களின் பலமுடையவர்களாயும்,
केचित्	சிலர்
वायुबलोत्तराः	வாயுவின் வேகத்திற்கு மேற்பட்டவர்களாயும்,
सन्ति	இருக்கின்றார்கள்.
तत्र	அவ்விடத்தில்
केचित्	சில
हरिपुङ्गवाः	வானரோத்தமர்கள்
अप्रमेयबलाः	அளவிடமுடியாத பலமுடையவர்களாய்
आसन्	இருந்தார்கள்.

प्रतिपूर्णमिवाकाशं संछन्नमिव तद्वनम्। तेन वानरसैन्येन सुग्रीवस्य महात्मनः ॥ २७ ॥

महात्मनः	மகாத்மாவாகிய
सुग्रीवस्य	சுக்ரீவனது
तेन	அந்த
वानरसैन्येन	வானரசைன்யத்தால்
तत्	அந்த
वनं	வனம்
इव	எல்லாமுமே
संछन्नं	முற்றிலும் மறைக்கப்பட்டதாகவும்
आकाशं इव	இடைவெளியெல்லாமுமே
प्रतिपूर्णम्	நிறைந்ததுமாயிருந்தது.

ततो द्वाराणि सर्वाणि अङ्गदो राजशासनात्। पर्यधावत दुर्धर्षो नक्षत्राणीव चन्द्रमाः ॥

ततः	அப்பொழுது	**सर्वाणि**	எல்லாவற்றிலும்
दुर्धर्षः	வெல்லுவதற்கரியவ னுகிய	**चन्द्रमाः**	சந்திரன்
अङ्गदः	அங்கதன்	**नक्षत्राणि इव**	நக்ஷத்திரங்களில் எவ்வண்ணமோ அவ்வண்ணமே
राजशासनात्	மன்னனது நியமத் தைக்கொண்டு	**पर्यधावत**	துழைந்து திரிந்து வந்தான்
द्वाराणि	வாயில்கள்		

कृत्स्नां हि कपिभिर्व्याप्तां द्रुमहस्तैर्महाबलैः। अपश्यल्लक्ष्मणः क्रुद्धः किष्किन्धां तां दुरासदाम्॥

क्रुद्धः	சினங்கொண்டி-ருந்த	**महाबलैः**	மகா பலிஷ்டர்களான
लक्ष्मणः	லக்ஷ்மணர்	**कपिभिः**	வானரர்களால்
तां	அந்த	**कृत्स्नां हि**	எங்கும்
दुरासदां	கிட்டுதற்கரிய	**व्याप्तां**	நிறைந்திருப்பதாக
किष्किन्धां	கிஷ்கிந்தையை[யேந்திய	**अपश्यत्**	பார்த்தார்.
द्रुमहस्तैः	கையில் விருக்ஷங்களை-		

ततस्ते हरयः सर्वे प्राकारपरिघान्तरात्। निष्क्रम्योदग्रसत्त्वास्तु तस्थुराविष्कृतायुधाः ॥

ते	அந்த	**प्राकार-परिघान्तरात्**	மதில் அகழ் முதலிய பிரதேசத்தினின்று
उदग्रसत्त्वाः	மிகுந்த ஆற்றலுடைய	**निष्क्रम्य**	வெளிவந்து;
हरयः	வானரர்கள்	**आविष्कृता-युधाः तु**	ஆயுதங்களை கையி லேந்தியவண்ணமே
सर्वे	எல்லோரும்	**तस्थुः**	நின்றார்கள்.
ततः	அப்பொழுது		

सुग्रीवस्य प्रमादं च पूर्वजं चार्तमात्मवान्। बुद्ध्वा कोपवशं वीरः पुनरेव जगाम सः ॥

आत्मवान्	மூன்ஜாக்கிரதையை யுடைய	**आर्तं**	வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்
वीरः	வீரராகும்	**पूर्वजं च**	தமயனையும்,
सः	அவர்	**बुद्ध्वा**	சிந்தித்து,
सुग्रीवस्य	சுக்ரீவனது	**पुनः एव**	முன்னிலுமதிகமாய்
प्रमादं च	குற்றத்தையும்,	**कोपवशं**	சினம்
		जगाम	கொண்டார்.

स दीर्घोष्णमहोच्छ्वासः कोपसंरक्तलोचनः। बभूव नरशार्दूलः सधूम इव पावकः ॥२२॥

नरशार्दूलः	புருஷோத்தமராகும்	**कोपसंरक्त-लोचनः**	கோபத்தால் கண்கள் சிவந்து
सः	அவர்	**सधूमः**	புகையுடன் கூடிய
दीर्घोष्ण-महोच्छ्वासः	அதி உஷ்ணமாய் பெ ருமூச்சுவிட்டுக் கொ ண்டு	**पावकः इव**	நெருப்புபோல்
		बभूव	இருந்தார்.

बाणशल्यस्फुरज्जिह्वः सायकासनभोगवान् । स्वतेजोविषसङ्घातः पञ्चास्य इव पन्नगः ॥

बाणशल्य-स्फुरज्जिह्वः	பாணநுணிகளாகிற துடிக்கும் நாக்கையுடையதும்,
सायकासन-भोगवान्	வில்லாகிற படத்தையுடையதும்,
स्वतेजोविष-सङ्घातः	தனது தேஜஸ்ஸாகிற விஷப்பெருக்கையுடையதுமான
पञ्चास्यः	ஐந்து தலை
पन्नगः	நாகம்
इव	போல் விளங்கினர்.

तं दीप्तमिव कालाग्निं नागेन्द्रमिव कोपितम् । समासाद्याङ्गदस्त्रासाद्विषादमगमद्भृशम् ॥३४॥

अङ्गदः	அங்கதன்
कालाग्निं इव	பிரளயாக்னியைப் போல
दीप्तं	ஜ்வலித்துக்கொண்டிருந்தவரும்
नागेन्द्रं	சர்ப்பராஜனே
इव	போலவே
कोपितं	கோபம் கொண்டிருப்பவருமான
तं	அவரை
समासाद्य	அணுகி,
त्रासात्	பயத்தால்
भृशं विषादं	மிக மனக்கவலையை
अगमत्	அடைந்தான்.

सोऽङ्गदं रोषताम्राक्षः संदिदेश महायशाः । सुग्रीवः कथ्यतां वत्स ममागमनमित्युत ॥

महायशाः	பெரும் புகழ் படைத்தவரும்
रोषताम्राक्षः	கோபத்தால் சிவந்த கண்களையுடையவருமான
सः	அவர்
अङ्गदं	அங்கதனை பார்த்து
संदिदेश	பின்வருமாறு கட்டளையிட்டார்.
वत्स	"குழந்தாய்!
सुग्रीवः	சுக்ரீவன்
मम	எனது
आगमनं	வரவு
इति उत	பின்கண்டவாறு
कथ्यताम्	தெரிவிக்கப்படட்டும்.

एष रामानुजः प्राप्तस्त्वत्सकाशमरिन्दमः । भ्रातुर्व्यसनसंतप्तो द्वारि तिष्ठति लक्ष्मणः ॥

एषः	"இந்த
रामानुजः	ராமரின் தம்பியும்
अरिन्दमः	சத்ருசம்ஹாரகரும்
भ्रातुः	தமயனது
व्यसनसन्तप्तः	துன்பம் கொண்டிருக்கிறவருமான
लक्ष्मणः	லக்ஷ்மணர்
त्वत्सकाशं	உம்மிடத்திற்கு
प्राप्तः	வந்தவராய்
द्वारि	வாசலில்
तिष्ठति	காத்து நின்றுகொண்டிருக்கின்றார்.

तस्य वाक्ये यदि रुचिः क्रियतां साधु वानर । इत्युक्त्वा शीघ्रमागच्छ वत्स वाक्यमिदं मम ॥

वानर	"வானரரே!
तस्य	அவருடைய
वाक्ये	சொல்லில்
रुचिः	ஊக்கம்
यदि	உண்டெனில்
साधु	நல்லபடி
क्रियतां	செய்யப்படட்டும்.
वत्स	குழந்தாய்!
मम वाक्यं	எனது சொல்லாகிய
इदं	இதை
इति	மேற்கண்டவாறு
उक्त्वा	சொல்லிவிட்டு,
शीघ्रं	விரைவில்
आगच्छ	திரும்பிவா".

लक्ष्मणस्य वचः श्रुत्वा शोकाविष्टोऽङ्गदोब्रवीत्। पितुः समीपमागम्य सौमित्रिरयमागतः॥

अङ्गदः	அங்கதன்	समीपं	அருகாமையில்
लक्ष्मणस्य	லக்ஷ்மணருடைய	आगम्य	சென்று,
वचः	வார்த்தையை	सौमित्रिः	"லக்ஷ்மணர்
श्रुत्वा	கேட்டு	अयं	இதோ
शोकाविष्टः	சோகாக்கிராந்தனுய்	आगतः	வந்திருக்கிறார்" என
पितुः	சிற்றப்பனது	अब्रवीत्	சொன்னன்.

अथाङ्गदस्तस्य वचो निशम्य संभ्रान्तभावः परिदीनवक्त्रः।
निपत्य तूर्णं नृपतेस्तरस्वी ततः कुमारश्चरणौ ववन्दे ॥ ३९ ॥

अथ	அதன்மேல்	ततः	அதனல்
तरस्वी	தைர்யசாலியும்	सम्भ्रान्तभावः	உள்ளம் சிதறியவனுய்
कुमारः	இளவரசுமாகிய	परिदीनवक्त्रः	முகம் வாடியவனுய்
अङ्गदः	அங்கதன்	नृपतेः	மன்னனுடைய
तस्य	அவருடைய	चरणौ	பாதங்களில்
वचः	சொல்லை	तूर्णं	விரைவில்
निशम्य	மனதினுள் ஆராய்ச்சி செய்து அறிந்து,	निपत्य	விழுந்து,
		ववन्दे	சேவித்தான்.

संगृह्य पादौ पितुरग्यतेजा जग्राह मातुः पुनरेव पादौ।
पादौ रुमायाश्च निपीडयित्वा निवेदयामास ततस्तमर्थम् ॥ ४० ॥

अग्र्यतेजाः	சிறந்ததேஜஸ்ஸுடையவனுகிய அவன்	जग्राह	சேவித்தான்.
		रुमायाः	உருமையினது
पितुः	சிற்றப்பனது	पादौ च	பாதங்களையும்
पादौ	பாதங்களில்	निपीडयित्वा	சேவித்துவிட்டு,
संगृह्य	சேவித்துவிட்டு,	ततः	அதன்மேல்
पुनः एव	அதன்மேல்	तं	அந்த
मातुः	தாயினது	अर्थं	செய்தியை
पादौ	பாதங்களை	निवेदयामास	தெரிவித்தான்.

स निद्राग्लानिसंवीतो वानरो न विबुद्धवान्। बभूव मदमत्तश्च मदनेन च मोहितः॥४१॥

निद्राग्लानिसंवीतः	தூக்கமும் சேம்பலும் மேலிட்டவனுய்	मोहितः च	மெய்மறந்துகிடந்த வனுமான
मदमत्तः च	குடிவெறிகொண்டவனுய்	सः	அந்த
		वानरः	வானரன்
मदनेन	காமவேட்கையால்	न विबुद्धवान्	கண்விழிக்காமல்
		बभूव	இருந்துவிட்டான்.

ततः किलकिलां चक्रुर्लक्ष्मणं प्रेक्ष्य वानराः। प्रसादयन्तस्तं क्रुद्धं भयमोहितचेतसः ॥४२॥

वानराः	வானரர்கள்
तं	அந்த
क्रुद्धं	சினங்கொண்டிருந்த
लक्ष्मणं	லக்ஷ்மணரை
प्रेक्ष्य	பார்த்து,
ततः	அதனால்
भयमोहित-चेतसः	பயத்தால் சிதறுண்ட மனமுடையவர்களாய்
प्रसादयन्तः	சாந்தப்படுத்துகின்ற வர்களாய்
किलकिलां	கிலகிலா சப்தத்தை
चक्रुः	செய்தார்கள்.

ते महौघनिभं दृष्ट्वा वज्राशनिसमस्वनम्। सिंहनादं समं चक्रुर्लक्ष्मणस्य समीपतः ॥ ४३ ॥

ते	அவர்கள்
लक्ष्मणस्य	லக்ஷ்மணருடைய
समीपतः	சமீபத்தில்
दृष्ट्वा	சுற்றிப்பார்த்து,
महौघनिभं	பெரும் வெள்ளத்தை நிகர்த்ததும்,
वज्राशनि-समस्वनं	வஜ்ராயுதத்திற்கும் இடிக்கும் சமானமான ஒலியையுடைய
सिंहनादं	சிம்மநாதத்தை
समं	ஏககாலத்தில்
चक्रुः	செய்தார்கள்.

तेन शब्देन महता प्रत्यबुध्यत वानरः। मदविह्वलताम्राक्षो व्याकुलस्रग्विभूषणः ॥ ४४ ॥

वानरः	வானரன் (சுக்ரீவன்)
मदविह्वलताम्राक्षः	கள்ளுண்டு மயங்கி கண்கள் சிவந்திருந்த வனும்
व्याकुल-स्रग्विभूषणः	மாலைகளும், ஆபரணங் களும் தாறுமாறாய் கிடக்கப்பெற்றவனும்
तेन	அந்த
महता	பெரும்
शब्देन	சத்தத்தால்
प्रत्यबुध्यत	விழித்துக்கொண் டான்.

अथाङ्गदवचः श्रुत्वा तेनैव च समागतौ। मन्त्रिणौ वानरेन्द्रस्य संमतौ दारदर्शिनौ ॥४५॥

अथ	அப்பொழுது
वानरेन्द्रस्य	வானரமன்னனுக்கு
संमतौ	இஷ்டமானவர்களும்
दारदर्शिनौ च	ராணிகளை தரிசிக்க உரிமையுடையவர்களு மான
मन्त्रिणौ	இரு மந்திரிகள்
अङ्गदवचः	அங்கதனுடைய
श्रुत्वा	கேட்டு [சொல்லை
तेन एव	அவனுடனேயே
समागतौ	திரும்பி உள்ளே சென்றார்கள்.

पृक्षश्चैव प्रभासश्च मन्त्रिणावर्थधर्मयोः। वक्तुमुच्चावचं प्राप्तं लक्ष्मणं तौ शशंसतुः ॥ ४६ ॥

तौ	அந்த
मन्त्रिणौ	மந்திரிகளாகிய
पृक्षः च	பிலக்ஷனென்பவனும்
प्रभासः च एव	பிரபாஸனென்பவ னும்
अर्थधर्मयोः	அர்த்தம், தர்மம் இவ் விரண்டினுடைய
उच्चावचं	ஏதோ சிலவற்றை
वक्तुं	சொல்ல
लक्ष्मणं	லக்ஷ்மணரை
प्राप्तं	வந்திருக்கிறவராக
शशंसतुः	தெரிவித்தார்கள்.

प्रसादयित्वा सुग्रीवं वचनैः सामनिश्चितैः। आसीनं पर्युपासीनौ यथा शक्रं मरुत्पतिम् ॥

आसीनं	வீற்றிருக்கும்
सुग्रीवं	சுக்ரீவனை
सामनिश्चितैः	நன்மையை பிரயோஜனமாய் உடைய
वचनैः	வார்த்தைகளால்
प्रसादयित्वा	உள்ளம் குளிரச் செய்துவிட்டு,
मरुत्पतिं	தேவமன்னனுகிய
शक्रं	இந்திரனிடத்தில்
यथा	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
पर्युपासीनौ	அவ்விருவர்களும் சமயம் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

सुग्रीवसचिवाः सर्वे मन्त्रार्थे समुपाविशन्। विनतश्च सुषेणश्च नीलोऽथ नल एव च ॥

विनतः च	வினதனென்றவனும்
सुषेणः च	ஸுஷேணனென்றவனும்
नीलः च	நீலனென்பவனும்
नलः एव	நளன் என்பவனும்
अथ	அப்படியே மற்றபடியான
सुग्रीवसचिवाः	சுக்ரீவன் மந்திரிமார்
सर्वे	எல்லோரும் [கள்
मन्त्रार्थे	ஆலோசனைக்காக
समुपाविशन्	வந்துகூடினர்கள்.

अङ्गदो वालिसूनुश्च हनुमांश्चैव बुद्धिमान्। एते सर्वे महात्मानः सुग्रीवं वानरोत्तमाः ॥४९॥
प्रसादयित्वा राजानं वचनैः सामनिश्चितैः। उवाच हनुमान् वीरो यथा शक्रं बृहस्पतिः ॥

एते	இந்த
महात्मानः	மஹாத்மாக்களும்
वानरोत्तमाः	வானரோத்தமர்களும்
सर्वे च	எல்லோரும் [மான
वालिसूनुः	வாலியின் புதல்வனு
अङ्गदः च	அங்கதனும் [கிய
बुद्धिमान्	பேரறிவினராகிய
हनुमान् एव	ஹனுமாரும்
सुग्रीवं	சுக்ரீவ
राजानं	மன்னரை
सामनिश्चितैः	நன்மையைப் பிரயோஜனமாகவுடைய
वचनैः	வார்த்தைகளால்
प्रसादयित्वा	உள்ளம் குளிரச்செய்துவிட்டு,
वीरः	தர்மவீரராகும்
हनुमान्	ஹனுமார்
बृहस्पतिः	பிரஹஸ்பதி
शक्रं	இந்திரனிடம்
यथा	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
उवाच	பின்வருமாறு மொழிந்தார்.

सत्यसन्धौ महाभागौ भ्रातरौ रामलक्ष्मणौ। वयस्यभावं संप्राप्तौ राज्याहौं राज्यदायिनौ ॥

भ्रातरौ	"சகோதரர்களாகிய
रामलक्ष्मणौ	ஸ்ரீராமரும் லக்ஷ்மணரும்
सत्यसन्धौ	ஸத்யஸந்தர்கள்,
महाभागौ	மகா புண்யாத்மாக்கள்,
वयस्यभावं	கம்முடன் கூட்டுறவாயிருத்தலே,
संप्राप्तौ	அடைந்தவர்கள்,
राज्याहौं	ராஜ்யத்திற்குரியவர்கள்,
राज्यदायिनौ	ராஜ்யத்தை அளித்தவர்கள்.

तयोरेको धनुष्पाणिर्द्वारि तिष्ठति लक्ष्मणः। यस्य भीताः प्रवेपन्तो नादान्मुञ्चन्ति वानराः॥

तयोः	"அவ்விருவர்களில்
एकः	ஒருவரும்
यस्य	எவருக்கு
भीताः	பயந்து
प्रवेपन्तः	நடுங்கி
वानराः	வானர்கள்
नादान्	கோஷங்களை
मुञ्चन्ति	இடுகின்றார்களோ,
लक्ष्मणः	அந்த லக்ஷ்மணர்
द्वारि	வாசலில்
धनुष्पाणिः	வில்லும் கையுமாய்
तिष्ठति	இருக்கிறார்.

स एष राघवभ्राता लक्ष्मणो वाक्यसारथिः। व्यवसायरथः प्राप्तस्तस्य रामस्य शासनात्॥

सः	"அந்த
राघवभ्राता	ராமரது தம்பியாகிய
लक्ष्मणः	லக்ஷ்மணர்
तस्य	அந்த
रामस्य	ஸ்ரீராமருடைய
शासनात्	ஆக்ஞையைக் கொண்டு
वाक्यसारथिः	அவருடைய ஆக்ஞையாகிய தேர்ப்பாகனைக்கொண்டும்
व्यवसायरथः	உபாயமாகிற ரதத்தைக்கொண்டும்
एषः	இதோ
प्राप्तः	வந்திருக்கிறார்.

अयं च दयितो राजंस्तारायास्तनयोऽङ्गदः। लक्ष्मणेन सकाशं ते प्रेषितस्त्वरयाऽनघ॥

अनघ	"கவலையற்றிருக்கும்
राजन्	அரசே!
लक्ष्मणेन	லக்ஷ்மணரால்
ते	தேவரீருடைய
सकाशं	ஸந்நிதிக்கு
दयितः	மனங்கோணாது நடக்கின்றவனும்
तारायाः	தாரையின்
तनयः च	புதல்வனுமாகிய
अयं	இந்த
अङ्गदः	அங்கதன்
त्वरया	அவஸரமாய்
प्रेषितः	தூதுகொண்டுவிடுக்கப்பட்டான்.

सोऽयं रोषपरीताक्षो द्वारि तिष्ठति वीर्यवान्। वानरान्वानरपते चक्षुषा निर्दहन्निव॥५५॥

वानरपते	வானரமன்னா!
सः	அந்த
वीर्यवान्	பராக்கிரமசாலியாகிய
अयं	இவர்
रोषपरीताक्षः	கோபத்தால் கலங்கிய கண்களையுடையவராய்
वानरान्	வானரர்களை
चक्षुषा	கண்ணால்
निर्दहन्	எரித்துவிடுபவர்
इव	போலவே
द्वारि	வாசலில்
तिष्ठति	கார்த்துநிற்கின்றனர்.

तस्य मूर्ध्ना प्रणामं त्वं सपुत्रः सहबान्धवः। कुरु शीघ्रं महाराज रोषो ह्यस्योपशाम्यताम्॥

त्वं	தேவரீர்
सपुत्रः	புதல்வனோடுகூடவும்
सहबान्धवः	பந்துக்களோடு
तस्य	அவருக்கு [கூடவும்
मूर्ध्ना	முடிதாழ்த்தி
प्रणामं	நமஸ்கரித்தலை
शीघ्रं	விரைவில்
कुरु	செய்யும்.
महाराज	மஹாராஜரே!
अस्य	இவரது
रोषः हि	கோபமும்
उपशाम्यताम्	ஆற்றப்படட்டும்.

यदाह रामो धर्मात्मा तत्कुरुष्व समाहितः। राजंस्तिष्ठ स्वसमये भव सत्यप्रतिश्रवः ॥५७॥

राजन्	அரசே	कुरुष्व	செய்துமுடியும்.
धर्मात्मा	தர்மாத்மாவாகிய	स्वसमये	உமது பிரதிக்ஞையில்
रामः	ஸ்ரீராமர்	तिष्ठ	நிலைநில்லும்.
यत्	எதொன்றை	सत्यप्रतिश्रवः	சொன்ன சொல்லை வாக்களித்தவண்ணமே செய்துமுடித்தவராக
आह	ஆக்ஞாபித்தருளி		
तत्	அதை [ணரோ		
समाहितः	விடாமுயற்சியுடைய வராகி	भव	ஆகும்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये किष्किन्धाकाण्डे एकत्रिंशः सर्गः ॥

आदितः श्लोकाः 10654 **किष्किन्धाकाण्डे आदितः श्लोकाः 1402**

द्वात्रिंशः सर्गः—முப்பத்திரண்டாவது ஸர்க்கம் ॥ ३२ ॥

हनुमता लक्ष्मणप्रसादनचोदना—ஹனுமார் லக்ஷ்மணரை நல்லவார்த்தை சொல்லச் சொல்வது.

अङ्गदस्य वचः श्रुत्वा सुग्रीवः सचिवैः सह। लक्ष्मणं कुपितं श्रुत्वा मुमोचासनमात्मवान् ॥

सुग्रीवः	சுக்ரீவன்	अङ्गदस्य	அங்கதனது
सचिवैः	மந்திரிமார்களோடு	वचः	வேண்டுகோளை
सह	கூட	श्रुत्वा	பெருமைப்படுத்தி,
लक्ष्मणं	லக்ஷ்மணரை	आत्मवान्	தன்னறிவு அடைந்த வனாகி
कुपितं	கோபத்துடனிருப்ப வராக	आसनं	ஆஸனத்தை
श्रुत्वा	அறிந்துகொண்டு,	मुमोच	விட்டெழுந்தான்.

स च तानब्रवीद्वाक्यं निश्चित्य गुरुलाघवम्। मन्त्रज्ञान्मन्त्रकुशलो मन्त्रेषु परिनिष्ठितान् ॥

मन्त्रकुशलः	ராஜகாரியங்களில்	मन्त्रेषु	ராஜகாரியங்களில்
सः	அவன் [நிபுணனாகிய	परिनिष्ठितान्	நிபுணர்களும்
गुरुलाघवं	தற்காலம் சம்பவித்திருக்கின்றதின் நன்மைதீமைகளைப்பற்றி	मन्त्रज्ञान् च	ராஜதர்மங்களையறிந்தவர்களுமான
		तान्	அவர்களைப்பார்த்து
